இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 145 | இதழ் : 14 | திகதி : 17.10.2021 | விலை : 30.00

## உலக ஆயர்கள் மாமன்றம்

## சந்தித்தல், செவிமடுத்தல், மற்றும் தெளிந்து தேர்தல் ஆகிய மூன்று பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்

### - அங்குரார்ப்பணத் திருப்பலியில் திருத்தந்தை -




இவ்வாண்டு ஒக்டோபர் முதல் 2023ம் ஆண்டு ஒக்டோபர் வரை, ஈராண்டுகள், கத்தோலிக்கத் திருஅவையில் நடைபெறும் உலக ஆயர்கள் மாமன்றத்தின் ஆயத்த செயற்பாடுகளைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆரம்பித்து வைத்துத் திருப்பலியைக் கடந்த ஒக்டோபர் 10ம் திகதி, ஞாயிற்றுக் கிழமை தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார்.

16வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் இறுதிக் கூட்டங்கள் 2023ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் வத்திக்கானில் திட்டமிடப் பட்டிருந்தாலும், இந்த மாமன்றம், தலத் திருஅவைகளின் கூடுதல் பங்கேற்புடன் ஆரம்பமாகியுள்ளது என்பதை உணர்த்தும் வண்ணம், இம்மாமன்றத்தின் துவக்கத் திருப்பலியை, வத்திக்கான் புனித பேதுரு பெருங் கோவிலில் திருத்தந்தை நிறைவேற்றினார்.

கோவிட்-19 பெருந்தொற்றின் கட்டுப்பாடுகளை மதித்து, குறைந்த அளவு மக்களின் பங்கேற்புடன் நடைபெற்ற 02

## உலக மறைபரப்பு ஞாயிறு - 2021




இவ்வாண்டுக்கான உலக மறைபரப்பு ஞாயிறுதினம் எதிர்வரும் ஒக்டோபர் 24ம் திகதி கடைப்பிடிக்கப்படுகின்றது. **"நான் கடவுள் மீது நம்பிக்கையோடு இருந்தேன், ஆகவே பேசினேன்"** எனும் கருப்பொருளில் சிந்திக்க இவ் ஆண்டில் அழைக்கப்படுகின்றோம்.

### உலக ஆயர்கள் மாமன்ற செயற்பாடுகள்

## யாழ் மறைமாவட்டத்தில் ஆரம்பம்




கடந்த 10ம் திகதி வத்திக்கானில் திருத்தந்தையால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட 2023ம் ஆண்டின் 16வது உலக ஆயர்கள் மாமன்றத்திற்கான தலத் திருச்சபையின் தயாரிப்பு செயற்பாடுகள் 17.10.2021 ஞாயிறு தினத்தன்று யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தற்கால சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்டத்தின் ஆறு மறைக்கோட்டங்களின் பிரிதிநிதிகளோடு குருக்கள், துறவியர் கலந்து கொண்டார்கள்.

எல்லாப் பங்குகளிலும் தயாரிப்புப் பணிகளை வருகிற 24.10.2021 ஞாயிறு அன்று ஆரம்பிக்குமாறு பங்குத் தந்தையர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

## இலங்கை பொலிஸ்மா அதிபர் யாழ். ஆயரைச் சந்தித்தார்



இலங்கையின் 35வது பொலிஸ்மா அதிபர் C.D. விக்கிரமரட்ண அவர்கள் கடந்த 13.10.2021 புதன்கிழமை அன்று உத்தியோகபூர்வ விஜயமாக வடமாகாணம் வந்திருந்தார்.

யாழ்ப்பாணம் வருகை தந்த பொலிஸ்மா அதிபர் யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர்களை யாழ் ஆயர் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச் சந்திப்பின் போது வடக்கில் தற்போது தலைதூக்கியுள்ள போதைப்பொருள் பாவனை, விற்பனை பற்றியும் அதன் தாக்கத்தால் ஏற்படும் சமூகச் சீர்கேடுகள், கோஷ்டி மோதல்கள் (வாள்வெட்டுக்கள்) என்பவற்றைப் பொலிஸார் உடன் நிறுத்த ஆவன செய்யுமாறு வேண்டியதுடன், பாடசாலைகளில் வீதி ஒழுங்கு முறைகளை மாணவர்களுக்கு மாதிரி காட்டிக் கற்பிக்குமாறும் ஓர் வேண்டுகோளை பொலிஸ்மா அதிபரிடம் யாழ் ஆயர் முன்வைத்தார்.

## யாழ் மறைமாவட்டத்தில் தேசிய பொதுநிலையினர் ஞாயிறு தினம்



தேசிய பொதுநிலையினர் ஞாயிறு தினம் கடந்த 10.10.2021 அன்று யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் கொண்டாடப்பட்டது. யாழ் மறைமாவட்ட பொது நிலையினர் கழக இயக்குநர் அருட்பணி யோ. யோ. மவுலிஸ் அடிகள், பேராலய உதவிப் பங்குத் தந்தை யோண் குரூஸ் அவர்கள் இணைந்து யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட் கலாநிதி ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலியில் பொது நிலையினர் கழகப் பிரதிநிதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கலந்து கொண்டனர்.

## புதுப்பொலிவு பெறும் யாழ். மறைக்கல்வி நிலையம்



யாழ். மறைமாவட்டத்தின் மையமாகத் திகழும் யாழ். மறைக்கல்வி நிலையமானது புனர் நிர்மாணம் செய்யப்பட்டு யாழ். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் கடந்த ஒக்டோபர் மாதம் 4ம் திகதி ஆசீர்வதித்துப் பணிக்காகத் திறந்து வைக்கப்பட்டது. 48 வருடங்கள் பழமையான இக்கட்டடம் யாழ் ஆயரின் பணிப்புடனும், நிதி உதவியுடனும் நிலைய இயக்குநர் அருட்பணி X.W. ஜேம்ஸ் அடிகளாரின் அயராத உழைப்பிலும் அழகுற நிறைவுற்றமை குறிப்பிடத்தக்கது.

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

# எமது எண்ணம்

## உயிர்ப்பற்றுப்போகும் உலகுக்கு உயிர்கொடுக்க நற்செய்தியாக வாழ்வோம்

ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி திருஅவை உலக மறை பரப்புத் தினத்தை நினைவுகூர்வதால் கத்தோலிக்கர்களாகிய நாம் எம் திருமுழுக்கின் வழியாக மறைபரப்புப் பணியில் ஈடுபட அழைக்கப் பட்டிருக்கின்றோம் என்பதை இவ்வார ஆசிரியத் தலையங்கத்தில் சிந்திக்க முனைகின்றேன்.

இவ்வருட மறைபரப்பு ஞாயிறு தினத்தின் மகுடவாக்கியம் "நான் கடவுள் மீது நம்பிக்கையோடு இருந்தேன். ஆகவே பேசினேன்" ஆகும். வருடந்தோறும் மறைபரப்பு தின ஞாயிறுகள் வந்து போகின் றன. மறை பரப்பப்பட்டதா? இறையரசு கட்டி எழுப்பப்படுகின்றதா? விதைக்கப்படுகின்றதா? என வினாக்களை அடுக்கிச் சென்றாலும் விடை பூச்சியத்தையே தழுவி நிற்கும். மறைபரப்பு ஞாயிறு தினத்தில் நாம் நற்செய்தியை அறிவிக்க அழைக்கப்படுகின்றோம். நற்செய்திக்காக வாழ்ந்து, நற்செய்தியின்படி வாழ்ந்து, நற்செய்திக்கு சான்று பகன்று, நற்செய்தியை உரைத்தல் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உள்ள கடமையாகும்.

"நான் கடவுள் மீது நம்பிக்கையோடு இருந்தேன். ஆகவே பேசினேன்" என்பதற்கு இணங்க மறைபரப்பில் நாம் பேசிட வேண்டும். நற்செய்தியை அறிவிக்க நமக்கு இறைநம்பிக்கை அவசியமானது. கிறிஸ்து இயேசுவும் அவரது சீடர்களும் பேசினார்கள். கிறிஸ்து இயேசு கடவுள் மீது கொண்ட நம்பிக்கையுடன் பேசினார். அவரது சீடர்கள் இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கையில் பேசினர். வெற்றி கண்டனர்.

கிறிஸ்து இயேசுவின் வாழ்வில் அவர் மௌனித் திருக்கவில்லை பேசினார். மலைப்பொழிவில் பேசினார். அற்புதங்கள் நிகழ்த்துகையில் பேசினார். "எழுந்து நட" இனிப் பாவம் செய்யாதே". பரிசேயருடன் மற்றும் யூதருடன் விவாதித்துப் பேசினார். "ஓய்வு நாளில் நன்மை செய்வது தவறா?"

"உங்களில் பாவமில்லாதவன் முதற்கல்லை எறியட்டும்" சிலுவைத் தீர்ப்பில் பேசினார். "வெளிப்படையாகவே பேசினேன், தொழுகைக் கூடங்களிலும், கோவில்களிலும் பேசினேன், மறை வாக ஒன்றும் பேசவில்லை, என்னை ஏன் கேட்கிறாய்?" என்று தலைமைக்குரு அன்னாவின் முன்னிலையில் இயேசுவின் பேச்சு அவரின் உறுதியை வெளிப்படுத்துகின்றது. இதற்குக் காரணம் அவர் தந்தை மீது கொண்ட நம்பிக்கை ஆகும்.

இன்று நம் சமூகத்தில் பல வகைகளில் பலரின் குரல் வளை-கள் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் கிறிஸ்தவர்களாகிய எமது வகிபங்கு என்ன? நீதி கேட்க எவரு மில்லை. தட்டிக்கேட்க எவருமில்லை. காரணம் அச்சம். இந்த அச்சத்திற்குக் காரணம் கடவுள் மீது நம்பிக்கை இல்லாத வாழ்வாகும். "கடுகளவு விசுவாசம் இருந்தால் இந்த மலையைப் பார்த்துக் கடல் நடுவே செல் என்று கூற மலை நிலைபெயரும்" எம்மால் முடிகின்றதா?

நயீம் நகர் கைம்பெண்ணின் துன்பம் கற்பனைகளின் எல்லைகளைத் தாண்டியது. ஒரு தாய் தன் ஒரே மகனைக் கல்லறைக்கு எடுத்துச் செல்லும் அகோரக் காட்சி உலகிலேயே மிகத் துயரமானது. சோகமானது. கைம்பெண்ணின் கதை முடிந்துபோகும் தருணத்தில் தான் எதிரில் இயேசு வருகிறார். ஊர் முழுவதும் திரண்டு ஓலமிடும் குரல்களுக்கு மேலாக. இயேசுவின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

"இளைஞனே! நான் உனக்குச் சொல்லுகிறேன் எழுந்திரு" (லூக். 7:14) கட்டளையிடும் கனத்த உறுதியான குரல் நம்பிக்கையுடன் ஒலிக் கின்றது. குரலைக் கேட்ட இளைஞனோ எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்குகின்றான். கடவுள் மீது நம்பிக்கையோடு இயேசு பேசினார். அந்த அற்புதம் நிகழ்ந்தது.

அன்று நயீம் நகரமே அழுது நின்றது. இன்று நச்சுயிரி தலை தூக் கியதால் முழு உலகுமே அழுது நிற்கிறது. வினாடிக்கு வினாடி நாடித்துடிப்புக்கள் அடங்குகின்றன. மரணித்தவரின் உடலுக்கு அஞ்சலி செலுத்த முடியா வண்ணம், கல்லறைகளில் உறங்க வேண்டிய ஆன்மாக்கள் மின்னடுப்பில் எரிகின்றன. எங்கும் மரண ஓலம்.

"அப்பாலே போ சாத்தானே" என்று கிறிஸ்து இயேசு கூறியது போன்று எம்மால் உரைத்திட முடியவில்லை. மரணங்களைக் கணக்கிட்டுக் கொண்டிருக்கின்றோம். முடக்கம் நாட்டுக்கல்ல. எம் மனதிற்கு. முடக்கம் தேசத் திற் கல்ல. நம் விசுவாசத்திற்கு. தட்டுப்பாடு கள் பொருட்களுக்கல்ல. நம் இறைநம்பிக்கைக்கு. முகக் கவசத்தால் பேச்சிழந்து நிற்கின்றோம். காப்பாற்ற யார் வருவார்?

வாழ்வு தரும் வள்ளலான இயேசுவின் வார்த்தைகள் நிறைவாழ்வு தரும் வார்த்தைகள் ஆகும். அவை வீணாய்த் திரும்பி வராது. இரு புறம் கூருக்குள்ள பட்டயம். முழுமையான வாழ்வைக் கொடையாக மலரச் செய்யும் அவரது வார்த்தைகளுக்கு அபரிமிதமான சக்தி உண்டு. அந்த வார்த்தைகளைப் பேசுவோம். எடுத்துரைப்போம்.

"மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல. கடவுளுடைய வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையாலும் உயிர் வாழ்வான்" உயிர் கொடுக்கும் வாழ்வு தரும் வார்த்தைகளை உரைத்து உயிர்ப்பற்றுப் போகும் உலகுக்கு உயிர்கொடுக்க மறைபரப்பு ஞாயிறு தினத்தில் நற்செய்தியாய் வாழ்வோம் பிறரையும் வாழ்விப்போம்.

**"நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பர். தீயவரோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுப்பர். உள்ளத்தின் நிறைவிலிருந்தே வாய் பேசும்"**

**(லூக் 6:45)**

# கண்டி மறைமாவட்டத்திற்கு 7வது புதிய ஆயராக மேதகு வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை



கண்டி மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றி வந்த ஆயர் மேதகு. யோசப் வியான்னி பர்னாந்து ஆண்டகையின் பணி ஓய்வை ஏற்றுக்கொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சிலாப மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றி வந்த ஆயர் மேதகு. வலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகையை, ஐப்பசி 09ஆம் திகதி கண்டி மறைமாவட்டத்தின் 7வது புதிய ஆயராக நியமித்துள்ளார்.

புதிய ஆயரின் ஆயத்துவ மேய்ப்புப்பணி மேலும் சிறக்க பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக நெஞ்சார வாழ்த்தி மகிழ்கின்றோம்.

# உலக ஆயர்மன்ற இறையியல் ஆணைக்குழுவிற்கு இலங்கை அருட்பணியாளர்



2023 ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் திருத் தந்தை பிரான்சிஸ் அவர்களால் திட்டமிடப்பட்டிருக்கும் உலக ஆயர் மன்ற இறையியல் ஆணைக்குழுவிற்கு இலங்கையின் பிரபல இறையியலாளரான அருட்பணி விமல் திரிமான்ன (XSSR) அடிகளாரை ஆயர் மன்ற ஆணையகத்தின் பொதுச் செயலாளர் மேதகு. மாரியோ கர்தினால் கிறிச் ஆண்டகை யினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அருட்பணியாளர் தற்போது அம்பிட்டிய தேசிய குருமடத்தில் ஒழுக்கவியல் இறையியல் கற்பிக்கின்றார். மேலதிகமாக அல்போன்ஸியேனும் திருத்தந்தை பல்கலைக்கழகத்திலும், உரோம் ஊர்பானிய பல்கலைக் கழகத்திலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

இறையியல் ஆணைக்குழுவிற்கு ஆசியாவில் நியமிக்கப்பட்ட மூவரில் இவரும் ஒருவராவார்.

# 16வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் ஆரம்ப தயாரிப்புப் பணிகள் திருத்தந்தையின் தலைமையில் வத்திக்கானில் ஆரம்பம்

16வது உலக ஆயர்கள் மாமன் றத்தின் முதல் கட்டத் தயாரிப்புப் பணிகள், உலகின் அனைத்து மறைமாவட்டங்களிலும், பங்குத்தளங்களிலும் ஒக்டோபர் 17ம் திகதி, ஞாயிறன்று தொடங்கியுள்ளது. முதற் கட்ட மாக. 2021ம் ஆண்டு ஒக்டோபர் 10ம் தேதியிலிருந்து 2022ம் ஆண்டு ஏப்ரல் வரை மறைமாவட்ட அளவிலும், 2022ம் ஆண்டு செப்டம்பரிலிருந்து, 2023ம் ஆண்டு மார்ச் வரை கண்டங்கள் அளவிலும் இத்தயாரிப்புப் பணிகள் நடைபெறும். உலகளாவியத் திரு அவையின் இறுதிக்கட்டப் பணிகள், 2023 ஆம் ஆண்டு ஒக்டோபரில் வத்திக்கானில் நடைபெறும் உலக ஆயர்கள் மாமன்றத்தோடு நிறைவடையும்.

இந்தத் தயாரிப்புப் பணிகளுக்கு உதவுவதற்கென்று, உலக ஆயர்கள் மாமன் றத்தின் பொதுச் செயலரான, கர்தினால் மாரியோ கிரெக் (Mario Grech) அவர்கள், பல்வேறு குழுக்களை உருவாக்கியுள்ளார். ஆன்மீகக் குழுவில் ஒருவராக, மரியின் ஊழி யர் சபையின் அருட்கலாநிதி டென்னிஸ் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஒக்டோபர் 09ஆம் திகதி வத்திக்கானில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தயாரிப்புப் பணிக் குழுக்களின் கூட்டத்திலும், அதைத் தொடர்ந்து வத்திக்கானில் மூன்று நாட்கள் நடைபெற்ற கூட்டத்திலும் அருட்கலாநிதி டென்னிஸ் அவர்கள் பங்கேற்றுள்ளார்.

இவர் உரோம் மரியானும் பாப்பிறை மரியியல் நிறுவனத்தின் தலைவராவார்.

## மடுத் திருத்தல யாத்திரிகர்களின் கனிவான கவனத்திற்கு

மாகாணங்களுக்கு இடையேயான பயணத் தடை தொடர்ந்திருப்பதால் மடுத் திருத்தலத்திற்கு வரும் பக்தர்கள், பயணத்தடை நீங்கும் வரை மடுத் திருத் தலத்திற்கு வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் இறைமக்களைத் தயவுடன் வேண்டி நிற்கின்றார்.

## உலக ஆயர்கள் மாமன்றம் ....

1ம் பக்கத் தொடர்ச்சி

இத்திருப்பலியில், பொதுநிலையினர், இரு பால் துறவியர், அருட்பணியாளர்கள், ஆயர்கள் மற்றும் கர்தினால்கள் என்ற அனைத்து நிலை யிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

திருஅவையில் தொடங்கியுள்ள இம் மாமன்றம், சந்தித்தல், செவிமடுத்தல், மற்றும் தெளிந்து தேர்தல் ஆகிய மூன்று பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் மறையுரையின் மையக்கருத்தாகப் பகிர்ந்து கொண்டார்.

**சந்தித்தல்**

கடந்த 10ம்திகதியன்று (ஞாயிறு) வழங்கப் பட்டிருந்த நற்செய்தியை மையப்படுத்தி தன் மறையுரையைத் துவக்கிய திருத்தந்தை, இந்த நற்செய்தியின் ஆரம்பத்தில், "இயேசு புறப்பட்டுச் சென்றுகொண்டிருந்தபோது" என்று கூறப்பட்டிருந்த சொற்களைச் சுட்டிக்காட்டி, இயேசு, மக்களைச் சந்திப்பதில் ஆர்வமும் திற மையும் கொண்டிருந்த தைப்போல், நாமும், இந்தச் சந்திப்புக் கலையை வளர்த்துக்கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம் என்று எடுத்துரைத்தார்.

சந்திப்புக்கலையை வளர்ப்பதற்கு, இறைவனை நோக்கியும், அயலவரை நோக்கியும் திறந்த மனம் கொண்டிருப்பது, முதல் தேவை என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்.

**செவிமடுத்தல்**

இறைவனையும், மனிதர்களையும் சந்திப் பதற்கு மிக முக்கியமான தேவை, செவிமடுக்கும் பண்பு என்பதை, தன் இரண்டாவது கருத்தாகக் கூறிய திருத்தந்தை, எவ்வித முற்சார்பு எண் ணங்களும் இன்றி, திறந்த உள்ளத்துடன் செவிமடுப்பது, உண்மையிலேயே, திருஅவைக்கு மிகவும் தேவையான ஒரு பண்பு என்று கூறினார்.

ஒவ்வொரு தலத்திருஅவையிலிருந்தும் கேட்கப்படும் கேள்விகள், உணர்த்தப்படும் கவ-லைகள், மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு செவிமடுப்பது இந்த மாமன்றத்தின் முக்கிய தயா ரிப்பாக இருக்கவேண்டும் என்று, திருத்தந்தை, தன் மறையுரையில் தெளிவுபடுத்தினார்.

**தெளிந்து தேர்தல்**

சந்தித்தல் மற்றும் செவிமடுத்தல் என்ற இரு நிலை களும், தன்னிலேயே முடிவுகள் அல்ல, மாறாக, அவற்றின் வழியே, அனைவரும் இணைந்து, சரி யான தெரிவுகளை மேற்கொள்ள தெளிவுகள் உருவாகவேண்டும் என்று, திருத்தந்தை பிரான் சிஸ் அவர்கள், தன் மறையுரையில் குறிப்பிட்டார்.

தன்னைச் சந்திக்க வந்த செல்வந்தரிடம், இயேசு, ஓர் ஆன்ம ஆய்வை மேற்கொள்ளச் சொன் னார் என்பதைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, இவ்வுலக செல்வங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு, செல்வந்தரை அழைத்ததுபோல், திருஅவையையும் இறைவன் அழைக்கிறார் என்று கூறினார்.

அடுத்துவரும் ஈராண்டுகள் நடைபெறும் இந்த ஒருங்கிணைந்தபயணத்தில், திருஅவையின் அனைத்து உறுப்பினர்களும் இணைந்து, தூய ஆவியாரின் வழிநடத்துதலைக் கண்டுணர்ந்து தங்கள் பயணத்தை மேற்கொள்ள இறையருளை இறைஞ்சுவோம் என்ற விண்ணப்பத்துடன் திருத் தந்தை தன் மறையுரையை நிறைவுசெய்தார்.

# தேசிய பொதுநிலையினர் ஞாயிறு - 2021

## “நீங்களே! திருஅவை உங்கள் குடும்பத்தில் இறைவனை அனுபவியுங்கள்”



### இயக்குநரின் பொது நிலையினர் தினச் செய்தி

பொது நிலையினர் தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் இச் சிறப்புப் பக்கம் மூலமாக எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களையும், ஆசீரையும், செபங்களையும், பொதுநிலையினர் நம்பிக்கையாளர்களாகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கி நிற்கின்றேன்.

கடந்த காலங்களில் கிறிஸ்துவின் அழைப்பிற்குச் செவிமடுத்து, எம்மோடு இணைந்து எமது பணிகளில் தோள்கொடுத்து, திருத்தூதுப்பணியை முன்னெடுத்துத்தந்த உங்கள் அனைவருக்கும் மறைமாவட்டம் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பணி வாழ்வில் கிறிஸ்துவின் சீடன் நான் என்கின்ற மனநிலையோடு வாழ்ந்து சாட்சியம் புரிந்த பல பொதுநிலை நம்பிக்கையாளரைப் பார்த்திருக்கின்றேன். அவர்களது உதவியைப் பெற்றிருக்கின்றேன். குருக்கள் துறவிகளின் பணிக்கு உறுதுணையாக விருந்து ஊக்கம் கொடுத்தவர்களைக் கண்டிருக்கின்றேன். திருஅவையின் பணிகளில் ஆர்வத்தோடு பங்குபற்றி சமூகத்தில் உப்பாக, ஒளியாகத் திகழ்ந்து கிறிஸ்தவ சாட்சியம் பகர்ந்தவர்களோடு பழகியிருக்கின்றேன். கிறிஸ்துவின் அழைத்தலுக்குச் செவிமடுத்து திருத்தூதுப்பணிகளைச் செய்யும் அனைவரும் நம்பிக்கைக்குரிய ஊழியர்களே!.

இந்தவகையில் அமரத்துவமடைந்த பெருமதிப்பிற்குரிய வின்சென்ற் டி போல் அவர்களைப் பார்க்கின்றேன். பொறுப்புள்ள கணவராக, தந்தையாக, கிறிஸ்தவ நம்பிக்கையை வெளிப்படுத்திய நல்ல குடும்பத்தலைவனாக வாழ்ந்த ஒருவர் எமது குடும்பங்களுக்கு மிகச் சிறந்த ஒரு உதாரணமாகும். தான் சேர்ந்த பங்குத்திருஅவை, மறைக்கோட்டம், மறைமாவட்டம் என்பவற்றில் தன்னையும் ஒருவராக இணைத்துக்கொண்டு அவர் செய்த பணிகளை நான் மறக்கமாட்டேன் நேரம் தவறாமை, திருஅவையின் கோட்பாடுகளில் உறுதி, கடின உழைப்பு, அயலவர்கள் மீது அக்கறை கொண்டு உதவி செய்து சாட்சியமாக வாழ்ந்தவர். ஒவ்வொரு பொதுநிலை நம்பிக்கையாளரும் பின்பற்றக்கூடிய வாழ்வின் படிப்பினைகளோடும் குருக்கள் துறவிகளின் வாழ்விலும் பணிகளிலும் அக்கறை கொண்டும் ஊக்கப்படுத்தியும்தட்டிக் கொடுத்தும் அறிவுரைகூறியும் நல்வழிப் படுத்திய பொதுநிலை நம்பிக்கையாளராக இவரைக் காண்கின்றேன்.

திருஅவையில் பொதுநிலையினரே பெருந்தொகையாக இருக்கிறீர்கள். உங்களுடைய ஆற்றல்கள், திறமைகளுக்கேற்ப, பணிப்பொறுப்புக்களைக் கிறிஸ்தவ மனப்பான்மையுடன் செய்யுங்கள். உங்களது பணியின் காத்திரத் தன்மையை உணர்ந்து வத்திக்கான் சங்கம் பின்வருமாறு கூறுகின்றது. “எந்தெந்த இடங்களில் பொதுநிலையினரால் மட்டுமே, திருஅவை நிலத்தின் உப்பாகத் திகழமுடியுமோ, அந்தந்த இடங்களிலும் சூழ்நிலைகளிலும் திருஅவைப் பிரசன்னமாக செயலாற்றுவதாய் அமைக்கவே அவர்கள் தனிப்பட்ட முறையில் அழைக்கப் பெற்றிருக்கின்றனர்”

(திருஅவை.எண்.33)

**அருட்பணி யோ.யோ.மவுலிஸ் – இயக்குநர்**
**யாழ் மறைமாவட்டப் பொதுநிலையினர்கழகம்**






### தலைவரின் ஆசிச் செய்தி

#### மீண்டெழுவோம்

அலைகடலாய்ப் பொங்கி எழும் என தன்புப் பொதுநிலையினரே! இந்நாள் நமதே! வாழ்த்துக்களைக் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றோம். கொரோனா எம்மைப் புரட்டிப் போட்டுள்ளது. பல காலம் வீணாய்ப் போயுள்ளது. பல பாடங்களை நமக்குக் கற்றுத் தந்துள்ளது. அன்பென்னும் அச்சாணியில் உலகு சுற்றுகின்றது. தனித்திரு, விழித்திரு, செபித்திரு, என்பவை நாம் எம்மை அறியவும் கடவுளை நினைக்கவும் எமக்குத் தரப்பட்ட சந்தர்ப்பங்களே.

அன்பிய வாழ்வுப் பகிர்வு, குடும்ப ஒன்றுகூடல் எம்மை மேலோங்கச் செய்துள்ளது. துயர் துடைக்க முன் வந்தோம். மனிதம் இன்னும் உயிர் வாழ முன்னுதாரணம் படைத்தோம். அயலானின் துயரில் ஆழ்ந்த அனுதாபம் கொண்டோம். இவை கொரோனா எமக்குக் கற்றுக் கொடுத்த பாடங்கள். நீண்ட கால முடக்கத்தின்பின் மீண்டெழத் தயார்நிலையில் உள்ள நாம் எமது பொதுநிலையினர் பணிகளை உள்ளத்தில் ஏந்தி உயிர்ப்புடன் எழுவோம். கடந்த காலங்கள் கனவாய்ப் போகட்டும். இனி வரும் காலங்கள் எங்களின் காலங்கள். நல்லவை நடக்கட்டும். பங்குத்தளங்களிலும், மறைக்கோட்ட நிலைகளிலும் எமது பணிகளை வீரியம் கொண்டதாக மாற்றிடுவோம். யாழ். மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்கு தூண்களாகத் திகழ்வோம். ஓன்றாகக் கரம் பிடித்து நடப்போம். தடைகளைத் தகர்த்து முன் நோக்கிச் செல்வோம். வலிகளைச் சுமந்து உலகிற்கு உப்பாக, ஒளியாக மாறுவோம். உலகெல்லாம் நற்செய்தி பரப்பிட ஓரணியாய் மிளிர்வோம். உயிர்ப்புடன் எழுவோம். புதுயுகம் படைப்போம். பொதுநிலைப் பணியாளருக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

வாழ்க, பணி செய்து வளர்க...

**ம.றோமியல் – தலைவர்**
**யாழ் மறைமாவட்டப் பொதுநிலையினர் கழகம்.**



வின்சென்ற் டி போல் ஐயாவே!
நாங்கள் உம்மை
நன்றியோடு நினைக்கின்றோம்
என்றும் மறந்திடோம்
நின் பணிகளை சாரமுள்ள
உப்பாக ஒளியாக
சாட்சியமாய் வாழ்ந்து சென்றவரே
கிறிஸ்துவின் சீடனே
பொதுநிலைப் பணியாளனே
திருஅவை ஒளிவீச
சமூகம் உயர்வு பெற
பலதளங்களில் நின்று
பற்பல பணிகள் செய்தீர்
உம் வழி நாம் தொடர்வோம்
உம் பணிகள் நாம் செய்வோம்.
இறை சந்நிதி இளைப்பாற
இறைவனை நாம் வேண்டுகின்றோம்.

## இடர்கள் நிறைந்த சமகாலத்தில் பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி



#### முகவுரை

எமது இலங்கைத் திருஅவையில் ஒக்டோபர் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை “தேசிய பொதுநிலையினர் தினம்” கடைப்பிடிக்கப்பட்டது.

இம்முறை “நீங்களே! திருஅவை உங்கள் குடும்பத்தில் இறைவனை அனுபவியுங்கள்” என்னும் கருப்பொருளில் சிந்திக்க திருஅவை எம்மை அழைத்து நிற்கின்றது. அன்றய தினம் பொது-நிலையினரை மையப்படுத்தி, சிறப்புத்திருப்பலி ஒப்புக் கொடுப்பதும், அவர்களின் பொதுநிலையினர் சார்ந்த திருத் தூதுப்பணிகளைத் தெளிவுபடுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தி ஊக்கப்படுத்துவதும் இச் சிறப்புத் தினத்தின் முக்கிய நோக்கமாகும். “நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கின்றீர்கள்” (மத் 5:13) “நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கின்றீர்கள்”(மத் 5:14) என்ற இறைவார்தைகள் எம் ஒவ்வொருவரின் திருத்தூதுப்பணியின் முதன்மைத்தன்மையை எடுத்துக் கூறுகின்றன. நாம் வாழ்கின்ற இக்கட்டான இந்த சமகால சூழமைவில் எமது திருத்தூதுப்பணிகளில் சான்று பகர்ந்து வாழ நாம் அழைக்கப்படுகின்றோம்.

#### பொதுநிலையினரின் அழைப்பு

திருமுழுக்குப் பெற்ற நாம் அனைவரும் நற்செய்தியை அறிவிக்க அழைக்கப்பட்டுள்ளோம். இவ் உன்னதமான அழைப்பும் பொறுப்பும் இறைவனால் நேரடியாகத் தரப்படுகின்றது. “எனவே நீங்கள் போய் எல்லா இனத்தவரையும் சீடராக்குங்கள்” (மத்28:19) “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்”(மாற்கு16:15) என்னும் இயேசுவின் அழைப்பு இன்று எமக்கு விடுக்கப்படுகின்றது. எனவே எமது வார்த்தையாலும், சான்று பகர்கின்ற வாழ்வாலும் இயேசுவின் சீடத்துவத்துக்குள் நின்று இறைவார்த்தையின் விழுமியங்களுக்கூடாகத் திருத்தூதுப்பணிகளை ஆற்றுவதன் மூலமாகவும், இறையாட்சியை ஏற்படுத்துவது எமது கடமையும், பொறுப்பும் ஆகும்.

#### பொதுநிலையினரின் தளங்கள்

கத்தோலிக்க திருஅவையில் பொது நிலையினர் 99% வீதமாக இருப்பதனால் அதன் முற்னேற்றமான வளர்ச்சியும் உறுதித்தன்மையும் இறையாட்சியை ஏற்படுத்தும் பணிகளும் பொதுநிலையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தாம் வாழுகின்ற சூழமைவில் உல-கின் சவால்களுக்கு முகம் கொடுத்து அன்றாட வாழ்வில் சிலுவைகளை சுமந்து கொண்டு கிறிஸ்துவின் மனநிலையில் வாழ்வதே இவர்களின் அழைப்பாகும். குடும்பம், சமூகம், பங்குத்திருஅவை, பணித்தளங்கள், மற்றும் மாறுபடும் வாழ்வின் சூழமைவுகள் போன்ற தளங்களில் இவர்கள் உப்பாக, ஒளியாக, புளிக்காரமாக வாழ வேண்டுமென்பதே இறைவனின் விருப்பமாகும்.

#### கொரோனா முடக்கமும் பொதுநிலையினரும்

இன்று கொரோனா என்னும் கொடிய நோயின் ஆதிக்கத்தால் எமது வாழ்வின் முறைமைகள் சிதைக்கப்பட்டுள்ளன. பொதுமுடக்கம், தனிமைப்படுத்தல் ஊரடங்கு, நடமாடத்தடை, வேலைவாய்ப்பின்மை, வருமான வீழ்ச்சி, விலைவாசி ஏற்றம், பொருட்கள் தட்டுப்பாடு, அன்பான உறவுகளின் கொரோனா மரணங்கள் போன்றவற்றால் அதிகம் துன்புறும் மக்களைக் காண்கின்றோம்.

இந்நிலையில் ஒளியாக, உப்பாக, புளிக்காரமாக வாழ்ந்து இறையாட்சிக்கு சான்றுபகர்வோம். குடும்பத்தில் ஒருவருக்கு ஒருவர் ஆறுதலாக இருப்போம். குடும்பமாகச் செபிப்போம் நற்செய்தியை வாசித்துத் தியானிப்போம், இந்நிலையால் எற்படும் துன்பங்களையும் தாக்கங்களையும் எல்லோரும் சேர்ந்து சுமப்போம். கிறிஸ்துவின் பண்புகளைத் தாங்கி வாழ்ந்து குடும்பத்தில் ஏற்படக் கூடிய முரண்பாடுகளைத் தவிர்த்து மகிழ்வான வாழ்வைக் கட்டி எழுப்புவோம். பிள்ளைகள் தமது ஆன்மீக மற்றும் ஒழுக்க வாழ்வைப் பேண வழிகாட்டுவோம். அத்துடன் தேவையில் இருப்போரை இனம் கண்டு இரக்கத்தோடு அன்பு செய்து எம்மிடம் உள்ளவற்றைப் பகிர்ந்து கொள்வோம். இறப்புகளிலும் இழப்புக்களிலும் துன்புறுவோரின் அருகில் இருந்து ஆற்றுப்படுத்துவோம். அத்துடன் கொரோனாக் கட்டுப்பாட்டு விதிகளை மதித்து அதைக் கடைப்பிடிப்பதனூடாக அரசுக்கு ஆதரவு வழங்குவோம். இவை எல்லாம் நாம் பெற்றுக்கொண்ட பொது நிலை சீடத்துவ அழைத்தல் வாழ்வை வாழ இறைவன் எமக்குத் தரும் வாய்ப்புக்களாகும். (தொடர்ச்சி 10ம் பக்.)

#### மறைக்கோட்டப் பொது நிலையினர் கழகங்களுக்கு!

கடந்தகாலப் பணிகளுக்காகவும், ஒத்துழைப்புகளுக்காகவும் நன்றி கூறுகின்றோம். இத் துன்ப காலத்தில் செபத்தில் நிலைத்திருந்து திருஅவையோடு பயணித்து இயன்ற பணிகளை ஆற்ற வாழ்த்துகின்றோம். இவ் வருட இறுதிக்குள் மறைக்கோட்ட இயக்குநருடன் கலந்துரையாடி புதிய மறைக்கோட்டக் கழகத்தை உருவாக்க ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

**அருட்பணி யோ.யோ.மவுலிஸ்**
**மறைமாவட்ட இயக்குநர்**

# பொலித்தீனின் ஆதிக்கமும் எமது அழிவும்



அருட்சகோதரி நோமலா அன்ரனி (HC)

**ந**மது அன்றாட வாழ்வினில் கைவிட முடியாமல் சேர்ந்திருக்கும் பொலித்தீன் பைகள், உணவுப் பொதி செய்யப் பயன்படும் பொலித்தீன்கள் ஆகியவை தற்போது பாரிய சிக்கல்களைத் தோற்றுவித்துள் ளன. பொலித்தீன்கள் எத்தகைய பாதகமான விளை வுகளை எமக்கும், எமது சூழலுக்கும் ஏற்படுத்து கிறது எனத் தெரிந்துகொள்வோமாயின் எமது வாழ்விலிருந்து முற்றாகப் பொலித்தீன் பாவனை-யைத் தவிர்க்க முடியும்.

இப் பொலித்தீன்கள் இலகுவில் உக்குத லுக்கோ அல்லது பிரிந்தழிதலுக்கோ உட்படுவ தில்லை. 400 - 1000 வருடங்கள் பிரிந்தழியாமல் நமது சூழலில் காணப்படக்கூடியது. இவற்றினை மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியுமெனிலும் நடைமுறைச் சிக்கல்கள், வர்த்தக ரீதியாக இலாபமின்மை கார ணமாக மீள் சுழற்சி முயற்சிகள் வெற்றியளிக்க வில்லை. எரித்தல் மூலமே சூழலிலிருந்து அகற்ற முடியும். ஆனாலும் எரிக்கும் போது உருவாகும் நச்சுப் புகையில் டைஒக்சீன் ($C_4H_4O_2$) என்னும் இரசாயனப் பொருளை வெளியேற்றி நாம் சுவாசிக்கும் வளியை மாசடையச் செய்கின்றது. அத்துடன் எரிக்கும்போது பச்சைவீட்டு வாயுக்களை வெளியேற்றிப் புவியின் வெப்பநிலையை அதிகரிக் கின்றது.

பெற்றோலிய இரசாயனப் பொருளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொலித்தீன் பைகள் மீள வும் புதுப்பிக்க முடியாத வளமாகும். மலிவான விலையில் விற்பனையாகும் இப் பொலித்தீன் பைகள் இலகுவாகக் கிடைப்பதனால் மிகவும் பய னுள்ளதாகத் தோன்றினும் பல தீங்குகளை நமக்குப் பெரியளவில் ஏற்படுத்துகின்றது. எமது சுகவாழ் விற்காகவும் எமது சூழலைப் பாதுகாப்பதற்காகவும் பொலித்தீனை முற்றாகத் தவிர்ப்பது அத்தியா வசியமான தேவையாகவுள்ளது.

சூழலுக்கு நட்புத்தன்மையற்ற இப் பொலித்தீன்கள் உணவுப் பொருட்களைப் பொதி செய்யப் பயன்படும்போது உலர் வெப்ப வலய நாடு களில் பெறப்படும் வெப்பத்தினால் உணவுப் பொருட்களுடன் தாக்கமடைந்து உடலுக்குத் தீங்கு விளைவிக்கும். இரசாயனப் பதார்த்தங்களை உருவாக்குகின்றது.

பிளாஸ்டிக் கொள்கலன்களில் அடைக்கப் படும் உணவு வகைகள் புற்றுநோய் உருவாக்கும் காரணியாகத் தொழிற்படுகிறது.

பிளாஸ்டிக் பொருட்களின் கட்டமைப்பைப் பேணுவதற்காகச் சேர்க்கப்படும் தலேட்டுக்கள் என் னும் இரசாயனப் பொருட்கள் மனித உடலின் ஓமோன் சமநிலையைக் குழப்பமடையச் செய்யும் நச்சுப் பொருட்களாகும்.

எமது சூழலில் வீசப்படும் பொலித்தீன் பைகள் நீர் கால்வாய்களை அடைத்து சூழலை மாசடையச் செய்வது மட்டுமன்றிக் குளம், வாவி, கடல், சமுத்திரம் போன்ற நீர் நிலைகளை அடைந்து சூழற்தொகுதியின் சமநிலையை குழப்பமடையச் செய்கின்றது.நீர் வாழ் உயிரினங்களின் உடலி-னுள் சென்று மூச்சுத்திணறலை ஏற்படுத்தி அவை இறப்பதற்குக் காரணமாகின்றது.100000 எண்ணிக்கையிலான கடல்வாழ் உயிரினங்கள், நீலத்திமிங்கலங்கள், கடல்வாழ் முலையூட்டிகள், ஆமைகள், கடற் பறவைகள் இறப்பதற்கு இந்தப் பொலித்தீனே காரணமாகின்றது என அவுஸ் ரேலிய பல்கலைக்கழக ஆய்வு கூறுகின்றது.

90 வீதமான பறவைகளின் வயிற்றினுள் பொலித்தீன்களே காணப்படுகின்றது. இதனால் இவற்றின் ஆயுட்காலம் குறைவடைகின்றது. அத்துடன் காட்டு விலங்குகளின் உடலினுள்ளும், கால்நடைகளின் வயிற்றினுள்ளும் செல்லப்பிரா ணிகளின் உடலினுள்ளும் இப் பொலித்தீன் பைகள் உணவுடன் சென்று மூச்சுத்திணறலை ஏற்படுத்துகின்றது.

சிறு பிள்ளைகள் பொலித்தீன் பைகளுடன் விளையாடும்போது பொலித்தீன் மிக மெல்லிய தாகவும், வளி உட்புகமுடியாததுமாக இருப்பதனால் சுவாசப்பாதையைத் தடைசெய்து உயிரிழப்பைக் கூட ஏற்படுத்தியிருக்கின்றது.

மீள்தன்மை உடைய பொலித்தீன் பைக-ளில் எமது அன்றாடக் கழிவுகளை மாநகர சபை மூலமாக அப்புறப்படுத்துகின்றோம். இவை உகந்த முறையில் தரப்பிரிப்பு செய்யப்படாவிடின் எமது சூழலில் அங்குமிங்குமாகப் பரந்து காணப் படும். மண்ணினுள் சென்று இயற்கையான தரைத்தோற்ற அமைப்பை மாற்றமடையச் செய்கிறது. இயற்கை அங்கிகளின் வாழிடங் களை அழிவடையச் செய்வது மட்டுமன்றிப் பல உயிரினங்கள் அழிவதற்கும் காரணமாகின்றது.

நிலத்தடி நீரையும் வடிந்தோடுவதற்குத் தடைசெய்து தூய்மையற்ற குடிநீராக மாற்று கின்றது. மண்ணின் அமைப்பைக் குழப்பமடை யச் செய்வதால் விவசாயத்திற்குத் தடையாக உள்ளது. ஏனெனில், பொலித்தீன்கள் இலகுவில் உக்குதலுக்கு உட்படாதவை. இவ்வாறு நீர், வளி, தரை என்பவற்றின் இயற்கைச் சமநிலை-யைக் குழப்பி மாசடைதலை இப் பொலித்தீன் பலவழிகளில் செய்கின்றது.

**பொலித்தீனுக்குரிய பிரதியீட்டுப் பொருட்கள்.**

- முன்னோர் பயன்படுத்தியது போன்று உணவு பொதி செய்ய வாழை இலை, தாமரை இலை என்பவற்றைப் பயன்படுத்தல் சிறந்தது. இவை சுகவாழ்வுக்கும் ஆரோக்கியமானவை.
- நுகர்வுத் தேவைக்காகப் பொருட்களைச் சேக ரிப்பதற்கு இயற்கை நார்களினால் ஆன துணிப் பைகள், நூற்பைகள், கடதாசி, காட்போட் பைக ளைத் தேடிப் பயன்படுத்தல் ஆரோக்கியமானது. இவை ஏற்கனவே நுகர்வுச் சந்தையில் அறி முகமாகி விட்டாலும் எமது மக்களுக்குப் பழைய பொலித்தீன் பைகளைக் கைவிட மனமில்லை. இச் செயற்பாடு நாமே நமக்கு மண்ணை வாரி இறைப்பதுபோல் உள்ளது.
- எமது முன்னோர் பயன்படுத்தியது போல மரத்தினால் ஆன சமையல் உபகரணங்கள், மரப்பலகை, அகப்பை, கண்ணாடி மாபிள் பாத்திரங்கள், மட் பாத்திரங்கள், தும்பினால் ஆன பொருட்கள், பிரம்பினால் ஆன பொருட் கள் மீளவும் எமது அன்றாட வாழ்வுடன் பழக் கப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இலகுவாகப் பயன்படுத்த எண்ணிய பொலித்தீன் பைகள் பிளாஸ்டிக் பொருட்கள் பல தீங்குகளை எமது சுகவாழ்வுக்கும், எமது சூழலுக்கும் ஏற்படுத்துவதன் மூலம் எம்மை குட்டிச்சுவராக்குகின்றது. எம்மை அறியாமலே எமது உடலுக்குள் பல இரசாயன நச்சுப் பொருட்கள் அன்றாடம் ஊடுருவிப் பல புதிய நோய்களைத் தோற்றுவிக்கின்றது.

உலக நாடுகளின் பிளாஸ்டிக் பொருட் களின் நுகர்வுச் சந்தைப்படுத்தலுக்கு இலங்கை, தாய்லாந்து, கொரியா, மலேசியா போன்ற நாடுகள் கட்டாயப்படுத்தப்படுகின்றன.

நாமாகவே முன்வந்து எமது சுகவாழ் வையும், சூழலையும் பாதுகாக்காவிடில் எமது எதிர்கால சமூகம் இருந்த இடம் தெரியாமல் போகும் நிலை உருவாகும். எனவே இயற் கையை நேசித்து எமது முன்னோர் பயன்படுத் திய இயற்கையான நட்புள்ள பொருட்களையும் வழிமுறைகளையும் வலிந்து பயன்படுத்தக் கற்றுக்கொள்வோம். இயற்கையின் சமநிலை யைக் குழப்பாமல் வாழ எம் வாழ்க்கை முறை களை விரும்பி மாற்றிக் கொள்வோம்.

**செயற்கை உலகை செயலிழக்கச் செய்வோம்**
**இயற்கை உலகை வலுவேற்றம் செய்வோம்.**

## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

09

நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும் பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கி யிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.

*- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்*

### அத்தியாயம் 4



**4.2 தமிழரின் அன்றைய வாழ்க்கை முறை**

தமிழர்கள், பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியா முழுவதும் பரவி இருந்த இந்து சமயத் தையே, அதன் சைவ சமய உருவத்தில் பின்பற்றி வாழ்ந்தனர். இந்து மதம் கிறிஸ்தவம், இஸ்லாம், புத்த சமயங்களைப் போல் விசுவாச நம்பிக்கைக் கோட்பாட்டைக் கொண்ட அமைப்புள்ள ஒரு மதம் அல்ல. அதற்கென்று தனித்துவ மதக்கோட்பாடுகளோ, மதத் தலை வர்களோ, அமைப்போ, இருக்கவில்லை.

இந்துக்கள் இனம், வாழ்விடம், சூழல், வாழ்முறை அனைத் தையும் ஒன்றாகக் கருத்தில் கொண்டனர். தமிழர் வாழ்வுக்கான அனைத்தும் ஒன்றாகப் பின்னிப் பிணைந்ததாகத் தமக்கென்றே இறைவன் கொடுத்ததாகப் புரிந்துகொண்டனர். ஆகையால் இந்துக் கள் மற்ற இனத்தவரை, தேசத்தவரை, தமது மதத்திற்கு மாறும்படி எதிபார்ப்பதில்லை. பிற மதத்தவர்கள் விரும்பின் இந்து வாழ்க்கை முறையையும் அதில் பொதிந்திருக்கும் ஞானத்தையும் கற்றுப் பயன டையலாம்.

இந்து சைவ மார்க்கம், கிறிஸ்தவம் தோன்றுவதற்குப் பல்லா யிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றிய மதச் சிந்தனை வழிபாடு களை உள்ளடக்கிய ஒரு தனித்துவ வாழ்க்கை முறையாகும். படைப்பு கள் அனைத்தையும் ஒன்றாக உள்ளடக்கிச் சிந்திக்கும் முறையிலே, பரந்த நோக்குடன் இந்திய இயற்கை வளங்களையும், முன்னோர் ஞா-னிகளின் போதனைகளையும், பல பண்பாடு கலை, தேச வழமை களையும் உள்ளடக்கியது. அதிலே இயற்கை வளங்கள் அனைத் தும் தெய்வீகக் கொடைகளாகக் கணிக்கப்பட்டு, விசேடமாக நீர், ஆறு, போன்றவை உயிர் ஓட்டங்களாகவும், வாழ்வின் மறு பிறப்புகள் கலந்தோடும் தெய்வீகமாகவும் கணிக்கப்பட்டன. இயற்கை, பண்பாடு, கலை, நாகரிகம், அனைத்தும் ஒன்றாகப் பின்னிப்பிணைந்து மனித னின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் உயிரும் உற்சாகமும் கொடுக்கும் ஞான சக்தியாக இருந்தது. ஆகையினால் மனிதர்கள் தமிழர்களாக, இந்து சமயத்துடன் பின்னிப் பிணைந்து நிம்மதியாக வாழ்பவர்களாக இருந்தனர்.

**4.3 தமிழர்களின் சைவ சமய சாராம்சம் கோவிலையே மைய மாகக் கொண்டது**

தமிழர்கள் “கோவிலைத் தழுவிய குடிகள், குடிகளைத் தழுவிய கோவில்” என்ற நெறியில் வாழ்ந்தவர்கள். திருக்கோயில் இல்லாத ஊர் என்பது, ஊர் அல்ல! அது காடு என்று, கோவிலையும், கோவிலில் நடக்கும் வழிபாடுகள், திரு விழாக்களை யும் மையப்படுத்தி வாழ்ந்தவர்கள். தேசவழமை, நாட்டுப் பழக்க வழக்கங்கள் வாழ்க்கையிலே பயபக்தியுடன் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன.

சைவ மதக் கோவில்கள், தனி மனிதர்கள், அல்லது குடும் பத்தினரால் கட்டப்பட்டு, அவர்களுக்கே சொந்தமாயின. அவர்களினால் பராமரிக்கப்பட்டு நடாத்தப்படும் கோவில்களில் அழைக் கப்பட்ட பிராமணக் குருக்கள் சமஸ்கிருத மொழியில் வழிபாடுகளை நடாத்தினர். இந்துக்கள் சமூகமாகத் திருவிழாக்களை ஆடம்பரமாகக் கொண்டாடுவர். பக்தர்களை வழிநடத்துவதில் பூசாரிமாருக்கு அதிகாரம் ஏதும் இருந்ததில்லை.

சுருங்கக் கூறின், இந்நிலையில் தமிழ் இனத்தைத் மதத் தன்மையுடைய இனமாகக் கருத முடியும். (religious people)

**4.4 சைவத் தமிழர்கள் கிறிஸ்தவ மதத்தில் எவ்விதம் சேர்ந்து கொண்டனர்?**

சைவக் கோயிலை மையமாகக் கொண்டு, சமஸ்கிருத மொழி யில் - பூசாரியின் வழிபாடுகளை முழுமையாக விளங்காவிட்டாலும் - தமிழர்கள் திருப்தி அடைந்தவர்களாக வாழ்ந்தனர். மறைபரப்பாளர் இவர்களைப் பார்த்து - ‘உங்களுக்கு இந்து சைவ வழியில் மீட்பு இல்லை! மீட்பு வேண்டுமாயின் எங்கள் கோவிலுக்கு வந்து, எமது மத வழிபாடுகள் ஆராதனைகளில் பங்கேற்க வேண்டும்’ - என்று கூறினர். ஆகையினால் தமிழர் சிலர் இந்துக் கோவிலையும் பூசாரியையும் தவிர்த்து, கிறிஸ்தவ ஆலயங்களையும் திருவிழாக் களையும் ஏற்று வாழச் சம்மதித்தினர். ஆனால் இந்து வாழ்க்கை முறையிலிருந்து பிரிந்து, எவ்வளவிற்கு வாழ முடியுமென்பது எப்பொழுதும் கேள்வியாகவே இருந்தது.

தமிழரின் இந்து வாழ்க்கை முறை தெய்வீக விழுமியங்களை யும் உள்ளடக்கிய ஓர் வாழ்க்கை முறை என்பதை அப்போதைய மறைபரப்பாளர் தெரிந்திருக்கவில்லை. அவர்கள் எல்லா மதங்களும் கிறிஸ்தவத்தைப் போல, விசுவாசக் கொள்கையையும், அமைப்புக் கட்டுப்பாட்டையும், கொண்ட ஒரு மதமாகக் கருதி, சைவ வாழ்க்கை முறைகளை விட்டுவிடும்படி வேண்டினர்.

(தொடரும்..)

# சமாதானத்துக்கான பணியினை கலை வழியாக முன்னெடுத்த திருமறைக் கலாமன்றம்

**வ**டக்குக் கிழக்கு ஆயர் மன்றமானது உருவாக்கப்பட்டதன் பின்னர் சமாதானத்துக்கான மையம் ஒன்றினை உருவாக்குவதற்கான உரையாடல்கள் நடைபெறுகின்ற இக்காலத்தில், சமாதானத்துக்கான பல முயற்சிகளைத் தொண்ணூறுகளில் இருந்தே திருமறைக் கலாமன்றம் மேற்கொண்டு வந்திருக்கின்றது என்ற வகையில் மேற்படி செயற்பாட்டுக்கு உதவும் என்ற வகையில் அது தொடர்பான ஒரு அறிமுகத்தை வழங்கும் நோக்குடன் இக்கட்டுரை வரையப்படுகின்றது

(19.09.2021 வெளியான கட்டுரையின் தொடர்ச்சி...)

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளின் வழிநடத்தலுடன் திருமறைக் கலாமன்றம் சமாதானத்துக்கான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## நாடக ஆற்றுகைகள்

கலைவழியாக சமாதான முயற்சிகளை முன்னெடுத்த திருமறைக் கலாமன்றம் 'அசோகா' 'தர்சனா' போன்ற நாடகங்களைத் தொடர்ந்து மூவினக் கலைஞர்களையும் இணைத்துத் தயாரித்து பல ஆண்டுகளில் இலங்கையின் பல பாகங்களிலும் மேடையேற்றி வந்தது. அதுமட்டுமன்றி பிரபல சிங்கள நாடக நெறியாளராகிய ஜெரோம் டி சில்வா அவர்களைக் கொண்டு நாடகப் பட்டறைகள் நடத்தி 'பூம் பூம்'என்ற பெயரில் மும்மொழிகளிலும் அமைந்த நாடகத்தினையும் தயாரித்து கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மேடையேற்றியது.

அதுமட்டுமன்றி சமாதான நடவடிக்கைகளின் ஒரு அங்கமாக 2003 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தென்னிலங்கையின் பிரபல நாடக நெறியாளராகிய 'பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திரா' அவர்களின் 'மனமே', 'சிங்கபாகு' போன்ற நாடகங்களை திருமறைக் கலாமன்றம் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் கொண்டு வந்து மேடையேற்றியது. இலங்கையின் வரலாற்றிலே முக்கியத்துவம் பெற்ற நாடகப் படைப்புகளான அந்த இரண்டு நாடகங்களையும் யாழ்ப்பாண மக்கள் முதல் தடவையாகத் தரிசிப்பதற்கு அது சந்தர்ப்பமாக அமைந்திருந்ததுடன். அவர்கள் போருக்குப் பின்னர் இம் மண்ணினைத் தரிசிப்பதற்கும் அது காரணமாக இருந்தது. அவ்வாறே சோமலதா சுபசிங்க அவர்களின் மூன்று சிறுவர் நாடகங்களும் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டன.

## தென்னிலங்கையில் கிளைகளை உருவாக்கியமை

சமாதானத்துக்கான முயற்சியாக தென்னிலங்கைக் கலைஞர்களுடன் உறவுகளை ஏற்படுத்திய திருமறைக் கலாமன்றம் தென்னிலங்கையில் கிளைகளை உருவாக்குவதனூடாகவும் அவர்களுடனான உறவுப் பகிர்வுகளை மேற்கொள்வதனூடாகவும், உறவை வலுப்படுத்தமுடியும். என் எதிர்பார்த்து. 1983 ஆம் ஆண்டு இனக்கலவரம் ஆரம்பித்த இடமாகிய பாணந்துறையிலேயே முதன் முதலாக மன்றத்தின் கிளை உருவாக்கப்பட்டது. அவர்கள் மத்தியில் புரிந்துணர்வை ஏற்படுத்துவது என்பது ஆரம்பத்தில் சவாலாக இருந்தாலும். சேபாலி ரணதுங்க என்ற கலைஞரின் அறிமுகம் அதனைச் சாத்தியமாக்கியது. சமாதானத்தினை நோக்கிய மன்றத்தின் நோக்கத்தினைப் புரிந்து கொண்ட அவர் அதில் இணைந்து கொண்டதுடன் தொடர்ச்சியாக இயங்கவும் முடிவுசெய்தார். அங்கு கவின் கலைகள் பயிலகம் ஆரம்பிக்கப்பட்டு 'கண்டிய நடனம்' 'பரதநாட்டியம்' ஆகிய வகுப்புக்கள் முதல் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டன. அங்கு ஏற்பட்ட புரிந்துணர்வு ஏனைய இடங்களிலும் பிராந்திய மன்றங்களை உருவாக்குவதற்கு சாத்தியமாயிற்று. தொடர்ந்து அவிசாவளை, அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, கண்டி, பொலநறுவை, அனுராதபுரம், ஆகிய இடங்களில் மன்றத்தின் கிளைகள் உருவாக்கப்பட்டது. தமிழ் பிராந்தியங்களில் இளவாலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் வவுனியா, புத்தளம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, ஹப்புத்தளை ஆகிய இடங்களில் கிளைகள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு பிராந்திய மன்றங்களிலும் சிறுவர்கலைக்கூடம், இளைஞர் பயிற்சிப் பட்டறைகள் மூலமாக கலைச் செயற்பாடுகளை ஆரம்பித்து படிப்படியாக சமாதானத்துக்கான பல செயற்பாடுகளை முன்னெடுத்தனர். நாடகப் பட்டறைகள், ஓவியப் பாசறைகள், கலாசார சுற்றுலாக்கள், நாடக, நடன ஆற்றுகைகள் என செயற்பாடுகள் வளர்த்துச் செல்லப்பட்டு, அவர்கள் தனித்து இயங்கும் செயற்பாடுகள் உருவாக்கப்பட்ட அதே வேளையில் எல்லா மன்றப் பிரதிநிதிகளும் ஒன்றாக இணைந்துசெயற்படக்கூடியதேசியநிகழ்ச்சித்திட்டங்களும் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. அவை சமாதானத்துக்கான மற்றுமொரு பாரிய செயற்களமாக மாறியது.

## சமாதான யாத்திரைகள்



தென்னிலங்கையில் 10 இடங்களிலும் ஏனைய தமிழ் மாவட்டங்களில் 10 இடங்களிலும் பிராந்திய மன்றங்களை உருவாக்கிய திருமறைக் கலாமன்றம் அங்கு பல்வேறு செயற்பாடுகளை சிறுவர்கள் இளைஞர்களை இலக்கு வைத்து மேற்கொண்ட அதேவேளை இம்மன்றக் கலைஞர்கள் எல்லோரும் ஒன்றிணையக் கூடிய சமாதான யாத்திரைகளையும் ஏற்பாடு செய்தது. 1999ஆம் ஆண்டிலிருந்து வடக்கில் இருந்து தென்பகுதிக்கு, கிளாலி கடல் மார்க்கமாகவும், காங்கேசன்துறை கப்பல் மார்க்கமாகவும், சில வேளைகளில் பலாலி விமானம் மூலமாகவும் அங்கத்தவர்களை அழைத்துச் சென்று தென்பகுதியில் எல்லாப் பிராந்தியக் கலைஞர்களும் ஒன்றுகூடும் சமாதானத்தினை வலியுறுத்தும் பல்வேறு கலாசார நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்தியது. அதன் நீட்சியாகவும் முழுமைப்படுதலாகவும் அமையும் வகையில் சமாதானக்காலம் அமைந்தது

முற்றுகையிடப்பட்டுக் கிடந்த யாழ்ப்பாணத்தின் மீள் தொடர்பாக ஏ 9 பாதை திறக்கப்பட்டது. அப்பாதையினால் 40 தென்னிலங்கைக் கலைஞர்களை முதன் முதலாக 2001 ஆண்டு, நவம்பர் மாதம் 13 ஆம் திகதி திருமறைக் கலாமன்றம் யாழ்ப்பாணம் அழைத்து வந்தது. 'கலைப் பாலம் 2001' என்ற பெயரில் ஒழுங்குபடுத்தப்பட்ட அந்நிகழ்வில் மூவினக்கலைஞர்களும் கலந்து கொண்டனர். ஒருவாரம்யாழ்ப்பாணத்தில்தரித்துநின்றஅவர்களும் யாழ்ப்பாணக் கலைஞர்களும் இணைந்து, கண்டிய நடனங்கள், பரத நாட்டியம் போன்ற பல்வேறு நடன நிகழ்வுகளையும் மூவினக் கலைஞர்களும் இணைந்து நடித்த 'தர்சனா' நாடகத்தினையும் யாழப்பாணத்தில் பல

காவலூர் யோவான்

இடங்களில் மேடையேற்றினர். வேம்படி மகளிர் கல்லூரி, மனிப்பாய் மகளிர் கல்லூரி, பருத்தித்துறை வடஇந்துக் கல்லூரி, மருதனாமடம் இராமநாதன் கல்லூரி போன்றவற்றில் கலைநிகழ்வுகள் நடத்தப்பட்டு இறுதியாக திருமறைக் கலாமன்றத்தின் திறந்த வெளி அரங்கிலே பிரமாண்டமாக கலைப்பாலத்தின் இறுதி நிகழ்வு நான்கு மதத்தலைவர்களின் முன்னிலையில் யாழ் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெற்றது. சமாதானத்தினை வலியுறுத்தும் ஒரு மைல் கல் நிகழ்வாக அது அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கு வந்தவர்கள் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்ற யுத்தங்களுக்குப் பின் முதன் முதலாக வந்திருந்தனர். இங்கிருந்த சின்னாபின்னப்படுத்தப்பட்டிருந்த மக்களின் வாழ்க்கையையும் பல வருடங்களாக யுத்தத்தில் ஏற்பட்ட பேரழிவுகளையும் தங்கள் கண்களால் கண்டனர். அதிர்ச்சி அடைந்தனர். அந்த யாத்திரையின் இறுதியில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் கண்ணீர் மல்க தமது அனுபவங்களை எடுத்துரைத்தனர். தமிழ் மக்களின் உண்மை நிலையை அவர்கள் அறிவதற்கான சந்தர்ப்பத்தினை அந்நிகழ்வு ஏற்படுத்திக் கொடுத்தது.

ஆனால் அந்த நிகழ்வினை ஏற்பாடு செய்தபோது சிங்களக் கலைஞர்கள் இங்கு வருவதற்கு அவர்களது சமூகம் தயக்கம் காட்டியது, மன்றத்தின் செயற்பாடுகளில் இருந்த நம்பிக்கை அவர்களை வரத்தூண்டியது அதே போன்று அக்காலப்குதியில் சிங்களக் கலைஞர்கள் இங்கு வந்து நிகழ்ச்சி செய்வதனை சில அடிப்படை வாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு எதிர்ப்பான சிந்தனையையும் கொண்டிருந்தனர் மன்றத்தின் கலைப்பாலம் கலாசார நிகழ்வுக்காக அமைக்கப்பட்ட வாயில் வளைவு முதலாக இரவில் எரியூட்டப்பட்டது. தென்னிலங்கைக் கலைஞர்களை ஏற்றி வந்த வாகனத்திற்குக் கல் எறிந்தார்கள். எனினும் மன்றக் கலைஞர்களின் ஒன்று சேர்ந்த பலத்தினால் அவை முறியடிக்கப்பட்டது. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கலைப்பால நிகழ்வினைத் தொடர்ந்து பல்வேறு அமைப்புக்களும் அத்தகைய நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்தினர். அதற்குத் திருமறைக் கலாமன்றமே ஒரு தொடக்கத் தினை எற்படுத்தியது என்பது குறிப்பிடத்தக்கது. அத்தகைய கலைப்பாலங்களைத் திருமறைக கலாமன்றம் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டு வரையிலும் பல ஆண்டுகளாக, பல தடைவைகள் நடத்திவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## சமாதான மாநாடுகள்

சமாதான முயற்சிகளின் தொடர்ச்சியாக எழுத்தாளர்கள் ஊடகவியலாளர்கள் கலைஞர்களை உள்ளடக்கிய சமாதான மாநாடுகளைத் திருமறைக் கலாமன்றம் ஏற்பாடுசெய்தது. கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய இடங்களில் மிகவும் பெரிய அளவில் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. சமாதானத்திற்கு இடையூறாக எப்போதும் அரசியல் வாதிகளே இருக்கின்றார்கள் என்ற கருத்து நிலை இரண்டு பிரிவினரிடையேயும் பலமாக இருந்தது. இத்தகைய சூழலில் சமூகத்துடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்த கலைஞர்கள் எழுத்தாளர்களை ஒன்று சேர்ப்பதனூடாக கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதனூடாக சமாதானத்தினைப் பலப்படுத்த முடியும் என திருமறைக் கலாமன்றம் எதிர்பார்த்தது. அதற்காக முதல் ஏற்பாடாக 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொழும்பிலே சசக்காவா மண்டபத்திலே முதல் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கையின் பல பாகங்கங்களிலிருந்தும் அழைக்கப்பெற்ற 150 கலைஞர்கள் எழுத்தாளர்கள் அம் மாநாட்டிலே கலந்த கொண்டார்கள். சிறப்பான திட்டமிடலோடு நடைபெற்ற இம்மாநாட்டில் இலங்கையின் பிரபல்யம் மிக்க நாடகக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் திரைப்படக் கலைஞர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். மன்றம் எதிர்பார்த்தது போலவே பல வாதப்பிரதிவாதங்களும் நடைபெற்றாலும் சமாதானத்தினை விரும்பி வரவேற்றவர்களாகவும், அதன் அவசியத்தினை உணர்ந்தவர்களுமாகவே பலர் இருந்தார்கள். பலருக்கும் தமிழர்களின் உண்மையான பிரச்சினைகள் தெரியப்படாமல் வெறும் பயங்கரவாதப் பிரச்சினையாகவே உணரப்பட்டு இருந்த நிலை



அம்மாநாட்டில் தெளிவுபடுத்தப்பட்டது. அம்மாநாட்டிலே எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அறிக்கைகளாக்கப்பட்டு அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பப்பட்டதுடன், தேசியப் பத்திரிகைகளில் மூன்று மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டது.


இம்மாநாடுகள் தொடர்ச்சியாக 2002 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. தென்னிலங்கையிலிருந்து இருபதுக்கும் அதிகமான கலைஞர்கள் யாழ்ப்பாணம் வந்தார்கள். அதேவேளை யாழ்ப்பாணதில் இருந்து நாற்பதுக்கும் அதிகமான கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## காவலன் கலசம்

# 2021-2023 ஆயர்கள் மாமன்றம் ஒரு கூட்டொருங்கியக்க திருஅவைக்காக: ஒன்றிப்பு, பங்கேற்றல், பணி

## (For a Synodal Church: Communion, Participation and Mission)




### மாமன்றம்

திருஅவையிலே மாமன்றத்தின் வயது மிகப் பழமையானதும், பாரம் பரிய மானதுமாகும். மாமன்ற கலாசாரமே திரு அவைக்கு, கடவுளின் சீடர் கூட்டம் என்ற இயல்பை வழங்குகின்றது. மாமன்றமாக இருத்தல், இயங்குதல் என்பது திரு அவைக்குப், புதிதான விடயம் அல்ல. பழைய ஏற்பாட்டிலே இஸ்ரயேல் மக்கள் கடவுளின் கூட்டமாக (அன்பர் சபையாக) அறியப்பட்டார்கள். “அல்லேலூயா! ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள் அவருடைய அன்பர் சபையில் அவரது புகழைப் பாடுங்கள்.” (தி.பா.149:1). ஆரம்பகாலத் திரு அவை, ஒன்றான சபையாகத் தன்பயணத்தைத் தொடங்கியது. (தி.ப. 4,32-33) ‘சினெட்’ கூட்டொருங்கியக்கம் என்ற சொல், ‘சுன்’ மற்றும் ‘ஹோதோஸ்’ (συν οδος) என்ற இரண்டு கிரேக்கச் சொற்களை உள்ளடக்கி ‘ஒன்றாகப் பயணித்தல் அல்லது ஒன்றான பாதை என்ற அர்த்தத்தைக் கொடுக்கிறது. திரு அவை என்பது ஒரு ஒன்றான பாதை மற்றும் ஒன்றான பயணம் என்பதைக் காட்டுகிறது.

இந்த மாமன்றமானது 16வது உலக ஆயர்களின் விசேட மாமன்றமாகும். இந்த மாமன்றத்திற்கு நம்மை தயார் செய்யும் முகமாக ஏற்கனவே தயாரிப்பு ஏடு (Vademecum) மற்றும் ஆயத்த ஆவணம் (Lineamenta), வெளியிடப்பட்டிருக்கின்றன.

### தயாரிப்பு ஏடு:

**அ.** இந்தத் தயாரிப்பு ஏட்டின் நோக்கம்: இந்த மூன்றாண்டு பயணத்திற்கான ஒரு கையேடாக இந்தத் தயாரிப்பு ஏடு உருவாக்கப்பட்டுள்ளது.

**ஆ.** இந்த மாமன்றத்தின் பின்னணி மற்றும் நோக்கம்: திருத்தந்தையின் கனவான கூட்டொருங்கியக்கப் பாதை என்பதையும், அதுவே கடவுளின் விருப்பம் என்பதையும் இந்த மாமன்றம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**இ.** இந்த மாமன்றத்தின் தலைப்பு: ஒரு கூட்டொருங்கியக்கத் திரு அவைக்காக, ஒன்றிப்பு, பங்கேற்பு, மற்றும் பணி. இந்த மூன்றும், வத்திக்கான இரண்டாம் பொதுச்சங்கத்தில் வலியுறுத்தப்பட்டவைதான். இந்த இயல்புகள் திரு அவையின் பிறப்பிலிருந்தே, கடவுளின் நோக்கமாகவும், விருப்பமாகவும் இருந்துள்ளன. இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள இந்த மூன்று வார்த்தைகளான, ஒன்றிப்பு, பங்கேற்பு, மற்றும் பணி போன்றவை, இந்த மாமன்றத்தின் நோக்கத்தைக் கொண்டு செல்லவிருக்கின்றன.

இம்மாமன்றமானது ஒரு தனித்துவமான செயல்முறையை இந்தத் தடவை முன்னெடுக்கிறது. இயேசு நற்செய்தியிலே எவ்வாறு மனிதர்களை அணுகினாரோ அதனை அடிப்படையாகக் கொண்டே, இந்த மாமன்றத்தில் திருமுழுக்குப் பெற்ற அனைவரும், அதாவது திருஅவையோடு ஒன்றிப்பு உறவில் இல்லாதவர்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள், அகதிகள், புலம்பெயர்ந்தவர்கள், வயோதிபர்கள், ஏழைகள், அறியப்படாதவர்கள் என்ற அனைவரும் உள்வாங்கப்படுவார்கள். யாரும் இந்த மாமன்றத்திற்கு வெளியில் விடப்படமாட்டார்கள். இந்த கூட்டொருங்கியக்கப் பயணத்தின் போக்கு, செவிமடுத்தல், தெளிந்து தேர்தல், பங்கேற்றல் போன்ற மிக உன்னதமான விழுமியங்களில் அமைக்கப்பட விருக்கிறது.

இந்த மூன்றாண்டு பயணத்திலே தூரநோக்குள்ள மனநிலையைத் திருஅவை கொண்டிருக்க வேண்டும் என்று திருத்தந்தை எதிர்பாக்கின்றார். திரு அவையின் இந்தக் கூட்டொருங்கியக்க பயணம், உரையாடுவதிலும், செவிமடுப்பதிலும், பகிர்வு மனநிலையைக் கொண்டிருக்கவேண்டும். அதிகமாக, செவிமடுக்கப் படவிரும்பும் இந்த உலகில், செவிமடுப்பதில் தாழ்ச்சி இருக்க வேண்டும். நம் உரையாடல்கள் இறந்துபோன பழைமைவாதத்திற்குத் தூபம் போடாமல், கிறிஸ்துவில் புதுமைக்கு இட்டுச் செல்ல வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் உள்ளத்தில் மனமாற்றம் என்ற விதையை விதைக்க வேண்டும். பிழையான முற்சார்பு எண்ணங்கள் விலக்கப்படவேண்டும்.

அருள்நிலைக்கு அழைக்கப்பட்டவர்களால் இழைக்கப்படுகின்ற தீமைகள் அறியப்பட்டு, அவை எதிர்காலத்தில் நடைபெறாவண்ணம் திரு அவை அமைக்கப்படவேண்டும். நான் மட்டுமல்ல மாறாக அனைவரும், என்ற தொனி அனைத்து உள்ளத்திலும் ஒலிக்க வேண்டும். வெறும் சித்தாந்தங்களைப் பறைசாற்றும் இந்தத் தற்காலச் சூழலில், நடைமுறை வாழ்விற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். எல்லாவற்றிக்கும் எல்லாமாக, திருத்தூதர்கள் ஆண்டவரிடம் கேட்டது போல நம்பிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.

இந்த கூட்டொருங்கியக்கப் பயணம் மிக எளிதாக அமையப்பபோவதில்லை. இதற்குப் பல உலகியல் ஆபத்துக்கள் எற்கனவே வழியில் காத்திருக்கின்றன. அவைமட்டில் திரு அவை அவதானமாக இருக்க அழைக்கப்படுகிறது. அவை கடவுளுக்குப் பதிலாக நம்மை நாமே-வழி நடத்த விரும்பும் சோதனை, நம்முடைய உடனடித் தேவைகளில் மட்டுமே கவனம் செலுத்தும் சோதனை, பிரச்சனைகளை மட்டுமே பார்க்கும் சோதனை, கட்டமைப்புக்களில் மட்டுமே பார்வையைச் செலுத்தும் சோதனை, திரு அவையின் எல்லைகளுக்கு அப்பால் செல்லக்கூடாது என்ற சோதனை, இந்த கூட்டொருங்கியக்கப் பயணத்தில் நாளடைவில் வரும் சோர்வு என்ற சோதனை, முரண்பாடு மற்றும் பிரிவினைக்கு சார்பான சோதனை, எற்கனவே திரு அவையின் செயற்பாடுகளில் பங்கெடுப்பவர்களை மட்டுமே உள்வாங்கும் சோதனை என்று பல சோதனைகள் காத்திருக்கின்றன.

இந்த மாமன்றத்திற்கென ஒரு தனித்துவமான போக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதவாது இந்தக் கூட்டொருங்கியக்கத் தயாரிப்பு, மறைமாவட்ட அளவில், தல ஆயர் தலைமையில் ஒக்டோபர் 17ம் நாள் அதிகார பூர்வமாகத் தொடக்கப்படுகிறது. ஆயர்கள் தங்கள் தங்கள் மறைமாவட்டப் பிரதிநிதிகளை, இந்த மாதத்தின் நிறைவுக்குள் நியமிக்கின்றார்கள். நம் மறைமாவட்டத்தின் மாமன்றப் பிரதிநிதியாக, நமது குரு முதல்வர், உயர் அருட்தந்தை பத்திநாதர் யோசப் தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் ஆயரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்ததாக மறைமாவட்டத்தில் சிறப்பு ஆயத்த ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. பங்குகள், இந்த மாமன்றத் தயாரிப்பின் அடித்தளமாக அமைகின்றன. இந்தக் கொரோனா காலத்தில், நம் அசைவுகள் மட்டுப்படுத்தப்பட்டாலும், நமக்குப் பரீட்சயமாயிருக்கின்ற மின்னியல் வசதிகளைக் கொண்டு, இந்த மாமன்ற ஆயத்தங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த மாமன்றம் வெற்றிபெற வேண்டுமெனில், பங்கு தொடக்கம் மறைமாவட்டம் வரை சிறப்பான ஆயத்தங்கள், முன்னெடுப்புக்கள், செயல் அமர்வுகள் செய்யப்படவேண்டும்.

மறைமாவட்டத்தைத் தொடர்ந்து, நாடளாவிய ஆயர் மன்றங்கள், கண்டங்கள் ரீதியான ஆயர் மன்றங்கள் போன்றவை இந்தக் கூட்டொருங்கியக்கப் பயணத்தை 2023ம் ஆண்டுவரை கொண்டு செல்ல எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆண்டவரின் பிரதிநிதியும், பேதுருவின் வாரிசுமான திருத்தந்தை மற்றும் அவருடைய ஆயர்கள் குழாமும், அவர்களுடைய மேய்ப்புப்பணி பொறுப்புக்களும், இந்த மாமன்றத்தின் பயணத்திற்கும், நிறைவிற்கும் இன்றியமையாதவை

அருட்பணி:
மிக்கேல் ஜெகன்குமார் கூஞ்ஞ அ.ம.தி.

யாக இருக்கின்றன. ஆகவே ஆயர் கள் இந்த மாமன்றப் பயணத்தின் காப்பாளர்களாக இருக்கின்றார்கள். ஆயரோடு இணைந்து மறைமாவட்ட ஆணைக் குழுக்கள், நிறுவனங்கள், மேய்ப்புப்பணிச் சபைகள், குருக்கள் மன்றம், பங்குகள், துறவற சபைகள், பொதுநிலை அமைப்புக்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள், மற்றும் ஏனைய பொதுப்பணிச் சபைகள் என்று இந்தப் பயணத்திலே பலர் பங்குதாரர்களாக அழைக்கப்படுகிறார்கள்.

மாமன்றத்தின் மட்டிலே குருக்களினதும் திருத்தொண்டர்களினதும் பங்களிப்பு மிகக் காத்திரமானதாகும். இது இரண்டு முக்கியமான புள்ளிகளைக் கொண்டமைகிறது. ஒரு புறம் மறைமாவட்ட ஆயர், மறுபுறம் திரு அவையின் மக்கள். இந்தவகைளில் இவர்கள் இந்த இரண்டு புள்ளிகளையும் இணைக்கும் பாலங்களாகப் பணியாற்றுகிறார்கள். இவர்கள், இணைப்பாளர்களாக, ஆயரையும் மக்களையும் ஒன்றிணையச் செய்கிறவர்களாக, இயேசுவின் மறையுடலாகிய திரு அவையை வளர்க்கும் முகவர்களாகிறார்கள். இறைமக்களின் தேவைகளை உணர்ந்து, செப மனிதர்களாக அதனைத் தியானித்து, தம் குருக்கள் மன்றத்திலே அதனை கலந்தாலோசித்து, அவற்றை சரியான பாதைக்குக் கொண்டுசெல்கிறார்கள்.

ஆயர்களின் மாமன்றத்திற்கு ஆயத்தம் செய்யும் முகமாக மறைமாவட்ட மாமன்றம் அமைக்கப்படுகிறது. இது இந்தக் கூட்டொருங்கியத்திற்குப் பாதைவரைபை தயார் செய்கிறது. அப்படியாக, மறை மாவட்டத்தில் பொருப்பாளர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார், மறைமாவட்டக் குழுவொன்று ஏற்படுத்தப்படுகிறது, மறைமாவட்டத்திற்கென்று பங்குபெறும் முறைமை தயார் செய்யப்படுகிறது, பல குழுக்களுக்கு ஒருங்கிணைப்பாளர்கள் ஏற்படுத்தப்படுகிறார்கள், மறைமாவட்ட ஆலோசனைக் குழுக்களுக்கு செயல் அமர்வுகள், நோக்குநிலை பட்டறைகள் போன்ற பல முன்னாயத்தங்கள் செய்யப்படுகின்றன. அனைத்து ஆயத்தங்களும் பங்கு தொடக்கம், மறைமாவட்டம் வரை என்ற இலக்கைக் கொண்டிருக்கின்றன. பின்னர் இந்தச் சிந்தனைகள் தான், திரு அவையின் தலைமைப்பீடத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

முடிவாக, இந்த ஆயர்கள் மாமன்றம் எழுப்பும் கேள்வியை உற்று நோக்கின், திரு அவையின் நற்செய்தி பறைசாற்றும் பயணத்தில், ‘ஒன்றிணைந்து பயணம் செய்தல்’ என்ற போக்கு எந்த அளவிற்குப் பங்குத் திருஅவையில் இடம் பெறுகின்றது? அதேவேளையில், இந்த ஒன்றிணைந்த பயணத்தில் வளர்வதற்கு எவ்வாறான வழிமுறைகளை இன்னும் மேற்கொள்ள, இந்தப் பயணத்தை வழி நடத்துபவரான, தூய ஆவியார் நம்மை அழைத்து நிற்கின்றார்? இந்தக் கேள்விகளுக்கு, இறைமக்கள், குடும்ப ரீதியாக, பங்கு ரீதியாக, மறைமாவட்ட ரீதியாக பதிலளிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க, இந்த ஆயத்த ஏடு பல கருப்பொருட்களை முன்வைக்கிறது. அதாவது திருஅவை வாழ்வில் நம்மோடு ஒன்றாகப் பயணிப்பவர்கள் யார் என இனம்காணல், நம்முடைய செவிமடுத்தல் பண்புகளைக் கண்டறிதல், நமது வெளிப்படையான பேச்சுக்கள் மற்றும் கொண்டாட்டங்கள் போன்றவை தரும் பாடங்கள், பொதுப் பணிக்கான பொறுப்புக்கள் எப்படிப் பகிரப்படுகின்றன, திரு அவையிலும் சமூகத்திலும் உரையாடல்கள் எப்படியிருக்கின்றன, கிறிஸ்தவ ஒன்றிப்பு என்ற பாரம்பரியம் திரு அவையில் எங்ஙனம் கடைப்பிடிக்கப்படுகிறது, அதிகாரம் மற்றும் பங்கேற்றல் போன்றவற்றில் நம் சிந்தனைகள், தெளிந்து தேர்தல் மற்றும் தீர்மானித்தல் போன்றவற்றில் நம் ஈடுபாடு, இறுதியாக கூட்டொருங்கியக்கத்தில் நம்மை நாம் எப்படி உருவாக்கிக் கொள்கின்றோம், போன்றவையாகும்.

ஆக, திரு அவை வரலாற்றில், மாமன்றங்கள் பல காத்திரமான மாற்றங்களை உருவாக்கியிருக்கின்றன. திரு அவை என்பது ஒரு இயக்கம். அது இயங்கிக்கொண்டே இருக்கவேண்டும். நம் கடவுள் நிகழ்காலத்திற்குரியவர். ஆக திரு அவை அவருடைய பணியாளராக, பயணம் செய்து கொண்டே இருக்க வேண்டும். இந்த மாமன்றம், நம் திரு அவையின் புதுப்பித்தலுக்கான இன்னொரு வாய்ப்பு. திரு அவை புதுப்பிக்கப்பட்டால்தான், இறையரசு விரைவாக அறிவிக்கப்படும். மாற்றம் என்பது வத்திக்கானிலிருந்து நம் முற்றங்களுக்கு வருவதல்ல, மாறாக நம் முற்றங்களிலிருந்து வத்திக்கானுக்கு செல்வதுமல்ல, மாறாக தூய ஆவியாரின் தூண்டலுக்கு ஏற்ப வீடும், தலைமைப்பீடமும் தம்மைத் தாமே புதுப்பித்துக் கொள்வதுமாகும். புதிய காற்றைத் திரு அவையில் சுவாசிப்போம்.

## காவலன் கலசம்

# மனமாற்றம் ஓர் உளவளக் கண்ணோட்டம்

(சென்றவாரம் 03.10.2021 தொடர்ச்சி )

### "தான்" - "நான்"

ஆங்கிலத்தில், 'Self' என்ற சொல்லிற்கும், 'ego' என்ற சொல்லிற்கும் வேறுபாடு தெளிவாக உண்டு. 'self என்ற சொல்லிற்கு தமிழில் "தான் என்னும் தன்மை" என்றும், "தனித்தன்மை", ஒருவரின் "அகநிலைக் கூறு", "உள்ளுயிர்த் தன்மை", "இயற்படிவம்" என்று பல சொற்றொடர்களால் வருணிக்கலாம். வரைவு இலக்கணம் கூறுவது கடினம்.

"Ego" என்ற ஆங்கிலச் சொல்லை "நான்" என்றும், ego-centric தன் முனைப்புள்ள, egoism தன்னலம் என்றும் வர்ணிக்கலாம். இந்த வேறுபாடு அவசியம்.

புறத்தில் நான் வளர்க்கும் ஒரு பொய்யான 'நான்' (false self) என்றும் கூறலாம். 'self' என்ற சொல்லை வைத்தே - 'false self' அதாவது ஒரு பொய்யான என்னை முகமூடிகள் போட்ட என்னை (கோவிட் பன்டெமிக்கால் பாதிக்கப்படாமல் இருக்க கையாளும் முகக் கவசம் அணிவதுவேறு! இந்தக் கோவிட் முகக்கவசம் அணிவது நீடிக்குமானால், அது ஒரு புதிய உளவியல் பிரச்சினையை உருவாக்கும் என்பது எனது எதிர்வுகூறு), பொய்யான அடையாளங்களால் என்னை அடையாளப்படுத்தி வாழ்வது என்று "அடையாளம்" என்ற தலைப்பில் ஓரளவு விரிவாக நான் எழுதியுள்ளேன்.

"பொய்யான நான்" மாறக்கூடியது. மாற்றலாம். மாற்றவேண்டும். அது ஒரு பாரிய மனமாற்றம். ஆனால், அந்த மனமாற்றம் ஏற்பட வேண்டுமானால் முதலில் 'பொய்யான நான்' என்ற தன்னுணர்வு எனக்குத் தேவை. இந்தத் தன்னுணர்வு இந்தப் 'பொய்யான நான்' யாரென்ற தன்னறிவைத் தரும். 'பொய்யான நான்' யாரென்று அடையாளம்காண்பதுஓர் அவசியத் தேவை. அன்றேல், எதிலிருந்து மனமாற வேண்டும் என்பதில் தெளிவின்மை ஏற்படும். தெளிவில்லாத தன்னறிவில் மனமாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை. "பொய்யான நான்" என்ற உணர்வில் ஒரு குழப்பம் ஏற்படின், அந்தக் குழப்பத்தில் இருந்து தெளிவு பெறுவது அவசியம். தன்னுணர்வு இல்லாதவர்களுக்கு, முதலில் அவர்களுடைய யதார்த்தமான நிலைப்பாட்டை அவர்களே அறிய வெளியில் இருந்து உதவி தேவைப்படலாம். எனக்கு அப்படிப்பட்ட உதவி எதுவும் தேவையில்லை, நான் யாரென்று எனக்குத் தெரியும் என்ற நானென்ற ஆணவம் கொண்டோர் மனம் மாறமாட்டார்கள். இப்படிப்பட்டோர் ஏராளமாக சமூகத்தில் வாழ்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் உறவுப் பிரச்சினைகளை உருவாக்குவார்கள். இப்படிப்பட்டவர்கள், இல்லறத்திலும் உண்டு, துறவறத்திலும் உண்டு. தன்னறத்திலும் உண்டு (தன்னறம் என்று நான் குறிப்பிடுவது தனி யாக வாழ்வோ ர் - Singlehood). இவர்கள் தங்கள் பிரச்சினைகளை மற்றவர்கள் மேல் சுமத்துவார்கள் (Projection). இது, ஒரு தற்பாதுகாப்புக் கவசம். கவசங்கள் போடுவோருடன் உண்மையான உறவு வளர்ப்பது கடினம்.



### "உண்மையான நான்"

"பொய்யான நான்" என்ற நிலைப் பாட்டிற்கு நேர்மறையான நிலைப்பாடு "உண்மையான நான்", (The true self). இது மாறாதது. என்னுடன் பிறந்தது. ஆனால், காலப்போக்கில் அதுவும், உளவள சமூகத் தாக்கங்களினால் பாதிக்கப்பட்டு வளரும் மனிதர் (இதற்கு விதிவிலக்கில்லை. ஆயினும், பெரும் ஞானி கள் உ+ம் இயேசு, தலைலாமா, திருஞானசம்பந்தர், போன்றவர்கள் விதிவிலக்கென எனது மனம் சொல்கின்றது). புறத்தே வளர்ப்பது தான் "பொய்யான நான்", புறத்தே இவர்கள், ஒரு "பொய்யான நானை" வளர்த்தாலும், அகத்தே ஓர் "உண்மையான நான்" எப்பொழுதுமே உண்டு. அது, அழிக்கப்படுவதில்லை. இதைத் தான் "விண்ணரசு அண்மையில்" உண்டு என்று இயேசு சொன்னாரா? அதாவது 'உன்னுள் உண்டு' என்று அர்த்தம் கொண்டாரா?

பொய்யான என்னில் உள்ள முகக் கவசங்களையும், அடையாளங்களையும் களைந்து, உண்மையான என்னில் வாழ் வது தான் மனமாற்றத்தின் அடிப்படை நோக்கம். இதை மனித வளர்ச்சி, ஒருங்கி ணைந்த வளர்ச்சி என்றும் கூறலாம். அனைத்து மக்களும் இந்த அழைப்பை ஏற்று, மனம் மாறி மனித வளர்ச்சி கண்டு மகிழ்வாக வாழலாம். எந்த மதமும் இதைத் தவறென்று சொல்லாது, சொல்ல முடியாது.

### திருமூலர்

இவ்விடத்தே திருமூலர் தனது மனமாற்றத்தைப் பற்றி இயற்றிய செய்யுளை வாசகர்களுடன் பகிர்கின்றேன்.

**"இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி**
**இடர்பாவம் கெடுத்து ஏழையேனை**
**உய்யத் தெருளாத சிந்தனைத் தெருட்டித்**
**தன்போல் சிவலோக நெறி அறியச்**
**சிந்தை தந்த அருளானை" 6:5446**

மேலும் இன்னோர் செய்யுளில்,

**"நற்பான்மை அறியாத நாயினேனை**
**நன்னெறிக்கே செலும் வண்ணம்**
**நல்கினானை"**
**( 6: 671)**

சொற்களைப் பார்த்து, வேற்று மைகளை வளர்க்காது, அந்தச் சொற்கள் தொட்டுக் காட்டும் அனுபவ ஒற்றுமையை வளர்ப்பது இக்காலத்தின் தேவை. மதங்களிடையே ஒற்றுமையை வளர்க்க இது உதவும். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் சி.என்.அண்ணாத்துரை தனது நூலொன்றில் எழுதினார். மாற்றான் தோட்டத்து மல்லிகை மணமும் எனது தோட்டத்து மல்லிகை மணமும், மணத்தில் ஒன்று தான். ஆயினும், மாற்றான் தோட்டத்து மல்லிகை மலர்ந்த சூழல் - அதாவது மண், எரு, மல்லிகை வளர்ந்த தோட்டத்து மக்கள் பேசிய மொழி, கலாசாரம் வேறுபட்டிருக்கலாம். அந்த மல்லிகையின் மணத்தை சுவாசித்தவர்கள் அந்தந்தச் சூழலினால் வரையறுக்கப்பட்டுள்ளார்கள்.

"Conditioned by the culture of the day" என்று இயேசு சபைக் குரவர் வில்லியம் ஜோன்ஸ்ரன் எழுதியுள்ளார். (அவர் எழுதிய நூல் The Inner eye Mysticism).

(மல்லிகை மணம் தொடரும்...)

*கரைவையூர்ச் செல்வம்*

---

### சமாதானத்துக்கான பணியினை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு வாதப்பிரதி வாதங்களுடன் புரிந்துணைர்வை நோக்கிச் சென்ற மாநாடாக அது இருந்தது. இந்நிகழ்விலே பல மூத்த சிங்களக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். அவ்வாறே இம்மாநாடுகள் தொடரந்து 2003 ஆம் ஆண்டு காலி யிலும், மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் தொடர்ச்சியாக நடத்தப்பெற்றன.

இத்தகைய செயற்பாடுகளின் தொடர்ச்சியாக திருமறைக் கலாமன்றத்துடன் இணைந்து சுனேத்திரா பண்டார நாயகா, அனோமா வீரசிங்க, கபில பண்டார போன்ற பல சிங்களக் கலைஞர்கள் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்தமையும் குறிப்பிடத்தக்கது.

**நிறைவுரை**

கலையின் வழியாக சமாதானத்தினை ஏற்படுத்துகின்ற பாரிய வேலைத்திட்டங்களை உருவாக்கி செயற்படுத்தி வருகின்ற திருமறைக் கலாமன்றத்தின் பணிகள் இன்றும் தொடர்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அவை அரசியல் அதிகாரத்திலுள்ளவர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. திருமறை கலாமன்றம் 2003 ஆம் ஆண்டு நடத்திய தமிழ் விழாவிலே கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டிருந்த தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்கள் தனது பேச்சிலே "யுத்தகாலத்திலே யத்தம் பற்றியும் சமாதானகாலத்தில் சமாதானம் பற்றியும் பேசுபவர்கள் மத்தியில் திருமறைக் கலாமன்றம் எக்காலத்திலும் சமாதானம் பற்றியே பேசி வருகின்றது அதனை நாம் மதிக்கின்றோம்" என்ற கூறினார். அவ்வாறே கடந்த நல்லாட்சிக் காலத்தில் மரியசேவி யர் அடிகள் முழு மூச்சாக இரண்டு தசாப்த காலங்களாக மேற்கொண்ட சமாதான முயற்சிகள் மதிக்கப்பட்டு சமாதானத்துக்கான மீயுயர் விருது, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் மரியசேவியர் அடிகளுக்கு வழங்கப்பெற்றது. அவரது இறப்பிக்குப் பின்னரான அஞ்சலி உரையில் முதலாக சிங்களக்கலைஞர்களான திருமதி சேபாலிரணசிங்க, சரத்சந்திரஜீவா, ஜெகான்பெரேரா போன்றவர்கள் அவரின் சமாதானத்துக்கான பணிகளை வலியுறுத்திப்பேசினர்.

இலங்கையின் நிரந்தர சமாதானமென்பது இன்றும் சவாலாக இருந்தாலும் அதற்கான பல்வேறு முயற்சிகள் பலராலும் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டுக்கொண்டே இருக் கின்றன. திருமறைக் கலாமன்றமும் இரண்டு தசாப்த காலத்திற்கும் மேலாக தனது இயலுமைகளுக்குள் நின்று அர்ப்பணிப்போடு பணியாற்றி வருகின்றது. 'இறைவா உமது சாந்தியின் கருவியாக என்னை ஆக்கும்' என்ற புனித அசீசியாரின் வேண்டுதல் வரிகள் ஒவ்வொரு கிறிஸ்தவர்களின் இதயத்திலும் ஒலித்து செயல் வடிவம் பெறவேண்டும்.

---

## பலியாகும் திருஅவை



திருப்பலி செலுத்தும் திருஅவை தந்தையாம் இறைவனுக்கு மிகச் சிறந்த பலிப்பொருளாக தனது தலைவராம் இயேசு கிறிஸ்துவையே வழங்கி அவரோடு இணைந்து தனது மன்றாட்டுகளையும், செபங்களையும் ஒப்புக் கொடுக்கின்றது. தந்தையாகிய இறைவன் இந்த மானிடத்திற்கு வழங்கிய மிகச் சிறந்த கொடையாகிய அவரது திரு மகனையே திருச்சபையும், தந்தையாம் இறைவனுக்குத் தனது கொடையாகத் திரும்பவழங்குகின்றது.

அதன் காரணமாக இக்கொடையோடு இணைத்து வழங்கப்படும் செபங்களும், மன்றாட்டுக்களும் தந்தையால் புறக்கணிக்கப்பட இயலாத தன்மையைப் பெறுகின்றன. திருஅவையைப் மகிழ்ச்சியும் வாழ்வும் அது தந்தையாகிய இறைவனுக்குப் பலியாக ஒப்புக் கொடுக்கும் அவரது திருமகன் இயேசுக் கிறிஸ்துவாகவே அமைகின்றார்.

திருஅவை என்னும் மறை உடல் தனது தலைவராம் இயேசு கிறிஸ்துவைப் பலிப்பொருளாக ஒப்புக்கொடுக்கும் தகுதியைப் பெற்றிருப்பதோடு, தானே பலிப் பொருளாகும் அழைப்பையும் பெற்றிருக்கிறது.

குரு நிகழ்த்தும் பலி அவரது தனிப்பட்ட செயற்பாடு அல்ல. திருச்சபையின் அருட்பணியாளர் என்ற முறையில் அவர் திருப்பீடத்தைச் சுற்றிக் குழுமியுள்ள இறை மக்கள் கூட்டத்தின் பிரதிநிதியாக திருவழிப்பாட்டிற்குத் தலைமை ஏற்று அதனை இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கின்றார். முதல் நிலையில் திருஅவையில் குரு நிகழ்த்தும் திருப்பலி குரு என்ற தனிமனிதரின் செயல் அல்ல. மாறாக, திருச்சடையின் செயற்பாடு எனவே, திருஅவை முழுவதுமாக இணைந்து ஒப்புக் கொடுக்கும் இப்பலியாகவே திருச்சபை மாற அழைக்கப்படுகின்றது. புனித பேதுரு இறை மக்கள் கூட்டம் முழுமையும் "அரச குருத்துவத் திருக்கூட்டம், தூய மக்கள் இனம், அவருக்கு உரிமையான மக்கள்" (1பேது29) என்று அழைப்பதன் வழியாக இறைமக்களின் பொதுக் குருத்துவப் பண்பையும், திருப்பலியின் பொது மைப் பண்பையும் வலியுறுத்துவதாகப் பொருள் கொள்ளலாம்.

**அருட்பணி. ஆனந்த்**

## காவலன் கலசம்

# இயேசுவின் முன் புனிதராய் நிற்போம்

இயேசுவின் முன் புனிதராய் நிற்போம் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு இத்தாலி நாட்டின் சில பகுதிகள் கொள்ளைக் கூட்டத்தினரால் மிகுந்த அச்சுறுத்தல் களுக்கு ஆளாகி இருந்தது. காடுகளின் அடர்ந்த பகுதிகளில் அவர்கள் மறைந் திருந்து இரவு நேரத்தில் பல கிராமங் களைஉறையாடி வந்தார்கள். அக்கொள் ளையர்களின் தலைவனாய் சில்வியோ என்பவன் இருந்தான். ஒருவராலும் அவனைப் பிடிக்க முடியவில்லை.

அப்பகுதியில் ஒரு சிறிய கிரா மம் இருந்தது. அங்கு வசித்து வந்தவர் களில் அந்தோனி என்பவரது குடும்பமும் இருந்தது. அவர்களின் ஒரே மகள் மரியா என்ற சிறுமி. மரியா ஒரு நாள் மாலை வேளையில் நகரம் சென்று தனியா கத் திரும்பி வரும்பொழுது கொள்ளையர் களால் எதிர்கொள்ளப்பட்டாள்.

மனதில் பயமும், கலக்கமும் ஆட்கொண்டது. நடுங்கிய அவள் கொள்ளையர்களின் தலைவன் முன் நிறுத்தப்பட்டாள். அவன் குதி ரையை விட்டு இறங்காது நடுங்கிய நிலையில் இருந்த சிறுமியிடம், "எங் களை வேவு பார்க்கவா அனுப்பப்பட்டாய்? உன்னை என்ன செய்கிறேன் பார் எனக் கர்சித்துக் கொண்டே இறங்கினான்.

பயத்தில் நடுங்கிய மரியா "உண் மையில் நான் வேவு பார்க்கவில்லை. இதோ இங்கே ஒரு மாதா குருசடி இருக் கிறது. இந்த மாதாவிடம் ஜெபித்துவிட்டுப் போகவே நான் குறுகிய வழியில் செல்லாது நீண்ட வழியில் வருகிறேன். இது தான் உண்மை " என்றாள்.மரியா வின் மாசற்ற முகத்தையும், தெய்வ பக்தியையும், மாதாவின் மீது அன்பை யும் கண்ட சில்வியோ அவளிடம், 'நான் நம்புகிறேன். நீ இந்தக் குருசடிக்கு வரும்போதெல்லாம் எனக்காகவும் சிறிய ஜெபம் சொல்ல மறவாதே' எனக் கூறிவிட்டு அவ்விடம் விட்டு அகன்றான். பல ஆண்டுகள் கடந்தது. மரியா திருமணமாகிக் குழந்தைகளுக்கும் தாயானாள். இருப்பினும் சில்வி யோவுக்காக தினமும் ஜெபிக்க மறக்க வில்லை. ஒரு நாள் செய்தித்தாளில் சில்வியோ பிடிபட்ட செய்தியும், சிறையில் அடைக்கப்பட்டு மரணதண்டனைக்கு



**அருட்பணி. ச.ஜெகநாதன்**

உட்படுத்தப்பட்டிருப் பதையும் கண்டாள். சில்வியோவின் மனம் திரும்புதலுக்காக அதிகமாய் மாதாவிடம் மன்றாடினாள். மாதா மரியா வின் ஜெபம் கேட்டு சில்வியோவை கடவுள் பிள்ளையாய் மாற்றினார். மாதா அவர் கனவில் தோன்றினார்.

சில்வியோ மரண தண்டனைக்கு முந்திய இரவு இயேசுவின் முன் கண்ணீர் வடித்தான். அடுத்த நாள் காலை நல்ல பாவசங்கீர்த்தனமும். திவ்விய நற்கருணையும் பெற்று மனம் திரும்பிய மைந்தனாய் மரணம் ஏற்றான். "மரியா எனக்காக இன்றும் ஜெபிக்கிறார். அவள் ஜெபத்திற்கு நான் நன்றி கூறுகிறேன்" என்றான் மரிப்பதற்கு முன்.

திரு.வெளி. 9:4ல் பாதாள படுகுழியிலிருந்து பாவிகளைத் தண்டிப்பதற்காக அனுப்பப்படும் வெட்டுக்கிளிக் கூட்டங்கள் மண்மீதுள்ள புல்லுக்கோ. பசும் பூண்டுக்கோ, மரங்களுக்கோ தீங்கிழைக்காமல் கடவுளின் முத்திரை நெற்றியில் இல்லாதவர்களை மட்டும் தாக்க வேண்டுமென்று அவர்களுக்கு சொல்லப்பட்டது எனக் காண்கிறோம்.

லூக் 20:9-19 வரை வாசிக்கும்போது தன் திராட்சைத் தோட்டத்தை குடியான வர்களுக்கு விட்டுச்செல்லும் நல்ல மனிதனைக் குறித்து வாசிக்கி றோம். நெடுங்காலத்திற்குப் பிறகு குத்தகைப்பணம் வாங்கிவர ஒரு ஊழியனை அனுப்புகிறான். அவர்களோ அவனை காயமுற அடித்து வெறுங்கையனாய் அனுப்பிவிடுகிறார்கள்.

இரண்டாம் முறை இன் னொரு ஊழியனை அனுப்புகிறான். அவனையும் காயமுற அடித்து வெறுங்கையனாய் அனுப்பிவிடுகி றார்கள். மூன்றாவது தன் மகனை மதிப்பார்கள் என நினைத்துத் தன் ஒரே மகனையும் அவர்களிடம் அனுப்புகிறான். அவர்களோ 'இவனே சொத்துக்குரியவன் இவனைக் கொன்றுபோடுவோம்' எனக்கூறி ஊருக்கு வெளியே தள்ளிக் கொன்றுபோட்டு விடுகிறார்கள். கோபம் கொண்ட நிலத்தலைவனோ அக்குடியானவர்களை ஒழித்து, அவர்களைத் தண்டனைக்கு உட்படுத்துகிறான்.

நாம் மனம் திரும்பி வாழ பரம தந்தையோ இறைவாக்கினர்களையும், இறைபணியாளர்களையும், ஏன். தம் ஒரே மகன் இயேசுவையும் கூட இப்பூமிக்கு அனுப்பிவைத்தார். ஆனால் நாமோ பாவத்திற்கு அடி மையாகி செல்வப்பற்றினாலும், உடல் இச்சையினாலும் பாவம் செய்து நம் இதயத்திலிருந்து இயேசுவை அகற்றி விட்டுப் பாவத்திற்கு அடிமைகளாய் வாழ்கிறோம். பாவத்தின் முடிவு நித்திய நரக தண்டனை என அறியாதவாறு வாழ்கிறோம். நாம் மனந்திரும்பி நம் நிலையற்ற நிலையை உணர்ந்து வாழ்வோம். ;

நம் திருஅவை புனிதர்களின் வர லாற்றில் அல்போன்ஸ் மரிய லிகோரி (1696-1787) மிகவும் குறிப்பிடத்தக்க வராய் இருக்கிறார். சிறந்த பக்திமான். தீவிர சிந்தனையாளர், நேப்பிள்ஸ் நாட்டின் உயர்குடிப் பிறப்பைச் சார்ந்தவர்.

"ஒரு மனிதன் ஆன்ம ஈடேற்றத்திற் காக உழைப்பதே மேன்மை மறைந்த பணி" எனக்கூறி குருவானவராய் பணி செய்தவர். இரட்சகர் சபையை ஆரம்பித்து மக்களுக்கு இறைவார்த் தையை போதிக்கவும், தியான உரைக ளால் மக்களின் ஆன்மீக ஈடேற்றத் திற்காகவும் உழைத்தார். ஆயராக, ஆன்மாக்களின் காவலராக செயற்பட்டு பதினோரு பக்தி புத்தகங்களையும் எழுதினார்.

**சகல புனிதர்கள் திருநாள்**
**கார்த்திகை 01**

மனமே மகிழ்ந்திரு மொழி களில் அச்சடிக்கப்பட்டு மக்களின் ஆன் மீக வாழ்வுக்காய் வெளிவந்தது; ஆனால் அவரின் கடைசி 12 ஆண்டு கள் பாரிச வியாதியால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையானார். உடல் வேத னையும் நோயின் கொடுமையும், பிசாசின் சோதனைகளும், ஆன்மிக வறட்சியும் அவரை சித்திரவதைக ளுக்குள்ளாக்கியது.

" இவைகளெல்லாம் என்னை இறை வன் முன் புனிதமாய் நிறுத்துவதற்கு இறைவனால் அனுப்பப்பட்ட சாத னங்கள். நல்ல பளிங்குச் சிற்பமாய் மாற இறைவன் என்னை உளிகளால் செதுக் கிக் கொண்டிருக்கிறார். நான் இறை வன் முன் புனிதமாய் நிற்க இவ்வேத னைகளை உளமார ஏற்றுக் கொள்கி றேன்" எனக்கூறி புனிதமாய் மரித்தார்.

**நாமும் தூய்மை இதயத்துடன் இறைவன் முன் நிற்க புனிதர் வாழ்வு வாழுவோம்.**


**மண்ணகப் பிறப்பின் 70 வருடமும் விண்ணகப் பிறப்பின் 04 மாதமும்**

பிறப்பு 19 . 10 . 1951



இறப்பு 03 . 06 . 2021

அமரர்
**ஜோசப் விக்ரர் ஜெயராசா**
(Rose Arts)

எம்மோடு அன்பிலே இணைந்து வாழ்ந்து
தியாகத்தால் எம்மை உருவாக்கி எடுத்து
உப்பாக ஒளியாக சாட்சியாய் வாழ்ந்து
விண்ணகம் சென்ற அன்புத் தந்தையே!

அகவை எழுபது நிறைவுறும் நாளில்
விழிநீர் சொரிய அன்போடு நினைக்கின்றோம்
பாவம் குறைகளை இறைவன் மனித்து
நிலைவாழ்வுக் கிரீடம் உமக்கு அருள்வார்
புனிதர்கள் தோழமை உம்மைச் சூழ
இறைவன் பாதம் அணியில் வாழ்வீர்

இல.05,
ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

இவரின்
பிரிவால் துயருறும்
மனைவி,
பிள்ளைகள்.

AD-72



**விண்ணக வாழ்வின் 1ம் வருட நினைவு**



மண்ணில் 02 . 08 . 1937



விண்ணில் 20 . 10 . 2020



அமரர்
**திரு. மனுவேற்பிள்ளை ஜேம்ஸ் ஸ்ரனிஸ்லாஸ் [ஜேம்ஸ்]**

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"



கலங்கரை விளக்கொன்று கானல் நீராய்ப் போய்
ஓராண்டு ஆகின்றது பிரிவின் வலி நீள்கின்றது.
உம் கரங்களுக்குள் அரவணைத்து
எமக்கு வழிகாட்டி உயர்வு தந்தீர்
உம் நினைவோடு வாழ்கின்றோம்
உமக்காக செபிக்கிறோம்
உமதான்மா இறைவனின் சந்நிதியில்
இளைப்பாற வேண்டுகின்றோம்



நினைவுத் திருப்பலி நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்தில்
காலை 7.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

வடக்கு றோட்,
நாரந்தனை

பிரிவால் துயருறும்
அன்பான மனைவி, வெளிநாட்டில் வசிக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்

AD 69

# காவலன் கலசம்

அர்த்தமுள்ள ஆன்மீகம் 05

# கடவுள் எப்படிப்பட்டவர்?



அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்

அன்பர்களே!

இந்தக் கொடிய நோயின் காலத்திலே, எமது அன்பு உறவுகள் கொத்துக் கொத்தாகச் செத்துக்கொண்டிருக்கும்போது "கடவுள் இருக்கின்றாரா? அவருக்கு நம் மீது ஏதாவது அக்கறை உண்டா?" போன்ற கேள்விகள் எமது மனங்களைக் குடைந்து கொண்டே இருக்கலாம். கடவுளை நம்மில் எவரும் கண்டதே இல்லை. மனிதன் எவ்வாறு முயன்றாலும் கடவுளைத் தெளிவாக அல்லது முழுமையாக அறிந்து கொள்ளமுடியாது. எனவே, இறைவன் தாமே முன்வந்து தம்மை வெளிப்படுத்தினார். அதில் முக்கியமான வெளிப்பாடு இயேசுக்கிறிஸ்து மூலமாக இடம்பெற்றுள்ளது. யோவான் 1:18 "கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை. தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும், கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார்." இந்தக் கடவுளையே நாம் அறிந்திருக்கிறோம் அனுபவிக்கின்றோம் ஆராதிக்கின்றோம் வழிபடுகின்றோம். இயேசுவுக்கு முற்பட்ட காலத்தில் இஸ்ரா-யேல் மக்கள் இறைவனை ஓர் அரசனா-கவே உணர்ந்தார்கள். ஆனால் இயேசு அனுபவித்த இறைவனோ ஓர் அன்பான தந்தை மாற்கு 1:11 "என் அன்பார்ந்த மகன் நீயே".

எனவே, அந்த அப்பா அனுபவத்தில் இறைவன் எங்கோ தொலைவில் இருப்பவர் அல்லர் மாறாக மனிதருக்கு உறவானவர், உயிரானவர், அவர்களுடன் உடனிருப்பவர் உரையாடுபவர். ஓர் அன்புத்தந்தை தன் பிள்ளைகளுக்கு எப்படியோ அப்படித்தான் எம் இறைவன். மேலும், இறைவன் அப்பா என்றால் அவர் அன்புமயமானவர். 1 யோவான் 3:8,16 "கடவுள் அன்பாயிருக்கிறார்." அம்மை, அப்பனாக இருந்து அனைத்து உயிர்களுக்கும் அன்புகாட்டி அருள்பாலிப்பதே அவரது இயல்பு. மனிதரில்தான் தந்தை வேறு தாய்வேறு. ஆனால் இறைவனே தாயுமானவர். தாயுமானவர் என்பதால் பிள்ளையின் தேவைகளை முன் கூட்டியே உணர்ந்து பரிவோடும் பாசத்தோடும் செயற்படுபவர். சிறப்பாக மாந்தர் அனைவரும் அன்புப் பிள்ளைகள், அருமைச் செல்வங்கள். அவர்கள் அவருடைய அடிமைகள் அல்ல மாறாக சுதந்திர மக்கள்.

அவர் அவர்களை படைத்தது தம்மைப் பாடிப்புகழவேண்டும், தமக்கு காணிக்கைகளும், பலிகளும் கொணரவேண்டும், தமக்குக் கோயில்கள் எழுப்பி, விழாக்கள் எடுக்க வேண்டும், தூபமிட்டுத் துதிபாடவேண்டும் என்னும் தன்னல நோக்கத்திற்காக அல்ல. மாறாக, தம் அன்பைப் பகிர்ந்து வாழவே. எனவே இறைவனின் அன்பு வாழ்வளிப்பது, புதுப்புதுவளர்ச்சிக்கு இட்டுச்செல்வது. இறைதந்தை மாந்தரின் வாழ்க்கைக்காக ஆயிரம், ஆயிரம் வளங்களை வழங்குபவர் மட்டுமன்றி, நிறைவான உணவாகத் தம்மையேதருபவர். யோவான் 6:51"விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார், எனது சதையை உண-வாகக் கொடுக்கின்றேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கின்றேன்." ஆம், அவர் மாந்தருக்கு உயிர் அளிக்கும் அருளாற்றலாக வாழ்வின் உள் ஆழத்தில் தம்மையே புதைத்துக் கொள்பவர் வரலாற்றின் அடி ஓட்டமாக இயங்கிப்புதியதோர் உலகம் புனைந்துகொண்டிருப்பவர். உலகெல்லாம், உயிர்களெல்லாம் அவரது பரிமளிப்புக்களே. மனித உறவுகளெல்லாம் அவரது பகிர்வுகளே, வாழ்வும், வரலாறும் தரும் வாய்ப்புக்களெல்லாம் அவரது அன்புப் பரிசுகளே. மானிடத்தின் புதுப்புது வளர்சிகளெல்லாம் அவரது உடனிருப்பின் எழில் மலர்ச்சிகளே.

உயிரளிக்கும் அப்பா இறைவன் சாவின் சக்திகளை ஒருபோதும் சகித்துக் கொள்பவரல்ல, மனித வாழ்வுக்கு எதிரானதெல்லாம் அவருக்கும் எதிர் ஆனதே. எனவே, நோயும், சாவும் அவருக்கு எதிரானதே. மனிதத்தை ஊனப்படுத்தும், அதன் மாண்பைச் சிதைக்கும், அதன் வளர்ச்சிக்கு விலங்கிடும் அனைத்தையும் உடைத்தெறிபவர் அவர். விடுதலைக் கடவுள் என்பதே அவரது இயல்பு. வி.ப 14:13,14 "அஞ்சாதீர்கள்! நிலைகுலையாதீர்கள்! ஆண்டவரே உங்களுக்காகப் போரிடுவார். நீங்கள் அமைதியாய் இருங்கள்." அன்பர்களே! ஆண்டவரது வார்த்தை உயிருள்ளது என்பதால், வேதம் தெளிவா-கச் சொல்வது போல நேற்றும் இன்றும், என்றும் மாறாத வார்த்தையென்பதால், அது இப்போதும் உயிருள்ளதுதான். மத் 14:27 ல் நாம் காண்கின்றது போல, அச்சத்தினால் அலறிய திருத்தூதர்களைப் பார்த்து "துணிவோடிருங்கள்: நான் தான் அஞ்சாதீர்கள்" என்ற இயேசு இன்றும் நமக்கு அதே வார்த்தைகளைக் கூறுகின்றார்.

ஆதிக்கம் செலுத்துவோரை, அடுத்தவரை சுரண்டுவோரை, அநீதி செய்பவரை அவர் எதிர்த்து நிற்பவர். ஏழை எளியவர்க்கு, தாழ்த்தப்பட்டோருக்கு உரிமை பறிக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர்க்கு ஆதரவானவர், நலிந்தவருக்கு இரக்கம், பாவிகளுக்கு மன்னிப்பு என்பது தான் அவரது இயல்பு. ஓர் இறையியலாளர் கூறுவது போல "மக்களைப்பேணி அவர்களுக்கு விடுதலை அளிக்கும் ஆற்றலாக இறைவனை அறிந்து உணர்ந்ததே இயேசுவின் அப்பா அனுபவம் - இதுவே நமது அனுபவமும்"

எனவே அன்பானவர்களே!

நீங்கள் எமது பகிர்வின் ஆரம்பத்தில் கேட்ட "இறைவன் இருக்கின்றாரா? அவருக்கு நம்மீது ஏதாவது அக்கறை உண்டா" போன்ற கேள்விகளுக்கு ஓரளவாவது பதில் கிடைத்திருக்குமென நம்புகின்றேன்.




## யாழ்ப்பாணத்தில் திருக்குடும்ப சபைக் கன்னியரின் பணி ஆரம்பம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அருட்பணி S.V.B. மங்களராஜா

இவர்களுள் 16 பேர் விடுதியில் தங்கியிருந்தனர். பாடசாலையுடன் சேர்ந்து 63 பெண்பிள்ளைகளைக் கொண்ட ஒரு அனாதைப்பிள்ளைகள் காப்பகமும் இயங்கியது. இவர்களுள்தமிழ்ப்பிள்ளைகளும்ஐரோப்பிய பிள்ளைகளும் இருந்தனர் இவர்களது தேவைக்காக 4 ஏக்கர் பரப்பளவு கொண்ட காணி (615 ஸ்ரேலிங் பவுண்கள்)கொள்வனவுசெய்யப்பட்டுசுற்றிவரமதில்கட்டப்பட்டது. இந்த நிறுவனக் கட்டுமான மற்றும் செலவுகளுக்காக இலங்கை முழுவதிலிருந்தும் 3 வருடங்களில் 1696 ஸ்டேலிங் பவுண்கள்சேகரிக்கப்பட்டது. இந்தக்கட்டுமானப் பணிகள் எல்லாவற்றை யும் நிறைவு செய்ய ஏறக்குறைய 3000 ஸ்டேலிங் பவுண்கள் தேவைப்பட்டது. இம்மடத்தின் வடமேற்குப்பகுதி அப்போது மஞ்சள்-கரைச்சான் குளத்தின்ஒருபகுதியாகஇருந்தது. இத்தாழ்வானபகுதியை கிழக்கில் இருந்த தேவரிக்குளத்தில் இருந்து மண் எடுத்து வந்து நிரப்ப வேண்டியிருந்தது. இங்கு கட்டிமுடிக்கப்பட்ட கட்டடத்தில் திருக்குடும்பக்கன்னியர் பின் 1870ல் வந்து குடியமர்ந்தனர் கன்னியர் குழுமத்திற்கு முதல்வராக வந்த மாறி சேவியர் மார்ச்சாண்ட் (Sr. Marie Xaviar Marchand) அவர்கள் 1878ம் ஆண்டுவரை (1862-1878) தாயாராக அரும்பணியாற்றினார். திருக்குடும்பக்கன்னியர் சபையினரின் தொடர் பணிகள், விரிவாக்கம் பற்றிப் பின்னர் பாப்போம்.

புனித சூசையப்பர் (வளனார்) சகோதரர்கள் சபை ஆயர் செமேரியா இன்னுமொரு சவாலையும் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. அது தான் யாழ் திருத்தூது மாவட்டத்தில் எண்ணிக்கையில் கூடிக்கொண்டிருந்த பாடசாலைகளுக்குத் தகுதியான ஆசிரியர்களைத் தேடுவது. ஒருசில ஆங்கிலப்பாடசாலைகளைப் பொறுத்தளவில்இங்கிலாந்திலிருந்துவரவழைக்கப்பட்டசிலஅமலமரித்தியாகிகள் சபையைச்சேர்ந்த அருட்சகோதரிகள் அப்போதைக்கு இத்தேவையை ஈடு செய்தார்கள். ஆயினும் பெரும் எண்ணிக்கையிலான சுதேசமொழி (தமிழ்)ப் பாடசாலைகளுக்குத் தேவையான தகுதி வாய்ந்த ஆசிரியர்களைத்தேட வேண்டிய தேவை நிறைவு செய்யப்படவேண்டியிருந்தது.

இந்தப் பின்னணியில் ஒரு புதிய துறவற சபை-யை ஆரம்பித்தமையானது வடக்கில் கல்வித்துறை வளர்ச்சிக்கட்டமைப்பில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்தது. ஆயர் செமேரியா திருத்தூது முதல்வராக இருந்த போது அவராலேயே முன்நிறுத்தப்பட்டவரும் பிற்காலத்தில் வடக்கிலும் இலங்கை முழுவதிலும் பொதுவாகக் கல்வித்துறையிலும் குறிப்பாக கத்தோலிக்கரது கல்வியின் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவருமான கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அ.ம.தி. அடிகள் 1864ம் ஆண்டு புனித சூசையப்பர் (வளனார்) துறவற சபையை ஆரம்பித்து வைத்தார். இத்துறவற சபையினரது குறிக்கோள் சுதேச மொழிப்பாடசாலைகளில் கல்வியை வினைத்திறனாக்குவது, குறிப்பாக மறைக் கல்வி புகட்டுவதும் மற்றும் தேவைக்கேற்ப பங்குத்தந்தையருக்கு அவர்களது மறைத்தளங்களில் உதவியாக இருப்பதுமாகும்.

கொழும்புத்துறையில் இயங்கி வந்த புனித சூசையப்பர் அனாதைச் சிறுவர்கள் காப்பகத்தில் உருவாக்கம் பெற்று வளர்ந்தவர்களான பக்தியார்வமுள்ள இருவர் இதே பாடசாலையில் ஆசிரியர்களாகத்துணை புரிந்துவந்தனர். இவர்கள் ஒருவித துறவறவாழ்க்கைக்குத் தம்மை அர்ப்பணிக்கவும் ஆர்வமுடையவராயிருந்தனர். விரைவில் அவர்களுடன் இன்னுமொருவரும் இணைந்து கொண்டார். நீண்ட தீர்க்கமாகச் சிந்தனையின்பின் ஆயர் செமேரியா அவர்கள் இவர்களைக் கொண்டு ஒரு துறவற சபையை - புனித சூசையப்பரின் அருட்சகோதரர்கள் (Brotherhood of St. Joseph) எனும் பெயரில் ஆரம்பித்தார். இவர்களது முக்கிய பணி பாடசாலைகளில் ஆசிரியப் பணி குறிப்பாக பாடசாலைகளிலும், பங்கிலும் மறையாசிரியர் பணி மற்றும் மறைத்தளங்களில் குருக்களின் பணிகளில் எந்தெந்த வகைகளில் உதவமுடியுமோ அந்தந்த வகைகளிலெல்லாம் உதவுவது இவர்களது கடமைகளாயிருக்கும். இவர்களது வாழ்க்கை முறைக்கான ஒரு எளிமையான, இலகுவான விதிமுறைத் தொகுப்பும் வகுக்கப்பட்டது. புதிய துறவற சபைக்கெனக் குறித்துவைக்கப்பட்ட வேட்பாளர்கள் சில நாட்கள் தங்களை ஆன்மீகத் தியானத்தின் வழியாகத் தயார் செய்த பின் 1864ம் ஆண்டு புனித சூசையப்பர் திருநாளன்று (மார்ச் 19ம் திகதி) கொழும்புத்துறையில் அமைந்திருந்த சிற்றாலயத்தில் ஆயர் செமேரியா முன்னிலையில் தமது துறவற வாக்குறுதியை எடுத்துக்கொண்டனர். அவர்களுக்கென ஒரு துறவற உடையும் வழங்கப்பட்டது. (இவர்களுள் ஒருவர்தான் பின்னர் அமலமரித்தியாகிகள் சபையில் சேர்ந்து குருவானார். அவர் தான் ஆன்மீகத் தாகத்துடன் யாழ் திருத்தூது மாவட்டத்தின் பல பங்குகளில் பணியாற்றிய X.N. சந்திரசேகரா அடிகளாவார்.) இந்தச் சுதேச துறவிகளின் சபையின் ஆரம்பகால வளர்ச்சி மிகவும் மெதுவாகத்தான் இருந்தது. (தொடரும்...)

## இறைவன் வாழுமிடம்

**அ**னைவருக்கும் பொதுவான நியாயமே எல்லாரும் நிறைவோடு வாழ்வதற்கான ஒரே வழி. ஒருமுறை அன்னை தெரேசா சபையின் அருட்சகோதரி ஒரு-வரின் தந்தை இறந்து விட்டார். அந்த நேரத்தில் இரயிலில் சென்றாலும் இறந்த அவரது தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள முடியாதே என அந்தச் சகோதரி வேதனைப்பட்டது அன்னை தெரேசாவின் கவனத்திற்கு வந்தது. அன்னை அந்தக் குழுமத்தின் இல்லத் தலைவியிடம் இப்படிக் கேட்டார்:

"ஒருவேளை என் தந்தை இறந்திருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்?" அதற்கு அந்தச் சகோதரி, "உடனே விமானத்தில் உங்களை அனுப்பி வைப்போம்" என்றார் இல்லத்தலைவி. சற்றும் தாமதியாமல் அன்னை சொன்னார்: "அப்படியானால் இந்தச் சகோதரியையும் அப்படியே விமானத்தில் அனுப்புங்கள். என் தந்தை எனக்கு எப்படி அன்புக்குரியவரோ அப்படியே அந்தச் சகோதரிக்கும் அவர் தந்தை அன்புக்குரியவர்" என்று கூறினாராம். பிறர் துன்பம், தன் துன்பம் போல் பாவித்து நியாயம் செய்வோரால் மானுடம் வாழ்கிறது. அங்கு இறைவனும் வாழ்கிறார்.

*நன்றி: இந்த நாள் இனிய நாள்*




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

*(ஸ்ரனி, யாழ்ப்பாணம்)*
**கேள்வி: ஆன்மீகத்தில் வளர நல்ல ஆலோசனை ஒன்று கூறுங்கள் பார்க்கலாம்!'**
**பதில்:** ஸ்ரனி, 'உனது ஆழ்மௌனத்தின் ஆழம்தான் உனது ஆன்மீகத்தின் ஆழம்!' எனச் செல்வம் கூறுகின்றார். இவர் யாரென்றால் எங்கள் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் தற்கால ரிஷி! தென்கோப்பாயில் சங்கமத்தில் இருக்கின்றார். மேலுள்ள கூற்றுக்கு விளக்கம் தேவையானால் அவரிடமே சென்று, கேட்டு, அறிந்து, ஆன்மீகத்தில் மேலும் வளரலாம்!

*(அருள், மன்னார்)*
**கே: வீதி விபத்துக்கள் வரவரக் கூடிக்கொண்டே போகின்றன! அதிலும், குடித்துவிட்டு வாகனத்தைச் செலுத்துபவர்களால்தான் அதிக விபத்துக்கள் எனச் சொல்லப்படுகின்றது. இவ்வாறு, குடித்துவிட்டு வாகனத்தைச் செலுத்துவதால் பல உயிராபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்க என்ன செய்யலாம்?**
**ப:** அருள், இலங்கையில் 22வீதமான வீதி விபத்துக்கள் மதுப் பாவனையால் நடைபெறுகின்றன என்ற தகவல் அண்மையில் வெளியாகி இருக்கின்றது! இதனை வாசித்துவிட்டு ஒரு குடிமகன் பின்வருமாறு வியாக்கியானம் செய்தான்: 'மேலேயுள்ள புள்ளிவிபரத்தின் அர்த்தம் என்ன தெரியுமா? 22வீதமான வீதி விபத்துக்கள்தான் குடியினால்! மிச்சம் 78 வீதமான விபத்துக்கள் தண்ணீர், தே-நீர், கோப்பி, யூஸ் போன்றவற்றைக் குடிப்பவர்களால் ஏற்படுகின்றது! ஆக, இதில் ஒன்று தெளிவாய்த் தெரிகிறது! எவற்றைக் குடிப்பவர்களால் அதிக வீதி விபத்துக்கள் இந்நாட்டில் நடக்கிறது என்பதை இந்நாட்டு மக்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்!' என்றானாம்! இத் துன்பங்களில் இருந்து நாம் தப்பிக்க, சட்டத்தினையும் ஒழுங்கையும் இறுக்கமாகக் கடைப்பிடிக்க வைப்பதன் வழியாகக் குறைக்கலாம்.

*(துஷி, யாழ்ப்பாணம்)*
**கே: எவ்வளவுதான் அன்பாக, ஆதரவாக, உதவியாக இருந்தாலும் நம்மை வெறுப்பவர்கள், எதிரிகள் என்று நம் வாழ்க்கைப் பயணத்தில் சிலர் வந்து விடுகின்றார்களே!? என்ன காரணம்?**
**ப:** துஷி, இரண்டு, இரண்டரை மணித்தியாலயங்களில் எடுக்கப்படும் சினிமாப் படங்கள் என்றாலும் பறவாயில்லை, அரை மணித்தியாலத் தொடராகத் தொடரும் சின்னத்திரை நாடகங்களை அலுப்படிக்காமல் நாள்தோறும் சுவாரசியமாக நகர்த்துவதற்கு வில்லன் பாத்திரத்தை அந்த அரை மணித்தியாலயத்திற்குள் புகுத்தி விளையாட்டுக் காட்டும்போது, நீண்ட நெடிய நம் வாழ்க்கைப் பயணத்தில் சில வில்லன்களும், சில வெறுப்பவர்களும், சில விரோதிகளும் வந்துபோவது யதார்த்தம்தானே துஷி!

*(செல்வம், யாழ்ப்பாணம்)*
**கே: 'கொரோனா ஊரடங்கு: நானும் என்னூர் நாய்களும்' என்ற உங்கள் நூலைப் படிக்க நேர்ந்தது. மிக மிகச் சுவாரசியமாக இருக்கின்றது. நாய்கள் என்று நீங்கள் குறிப்படுவது எந்த நாய்களை என வெளிப்படையாகக் கூறமுடியுமா?**
**ப:** ஐயோ! உங்களுக்கு இன்னும் விளங்கவில்லையா செல்வம்! எல்லா நாய்களையும்தான் என எத்தனை முறை வெளிப்படையாகச் சொல்வது! இதற்கு முந்திய தொடர்களைப் பாருங்கள். யாரோ ஒருவரோ, சிலரோ இதே கேள்வியைக் கேட்டிருந்தார்கள். எனது பதில், ஒரே பதில்தான்: எல்லா நாய்களையும்தான்!

*(யோசப், யாழ்ப்பாணம்)*
**கே: 'சிலைவழிபாடு' செய்கின்றார் கள் எனச் சிலர், குறிப்பிட்ட மதத்தவர்களைக் குற்றம் சுமத்துகின்றார்களே! என்ன கூறுகின்றீர்கள்?**
**ப:** யோசப், இது ஒரு சின்னஞ் சிறிய கேள்வி! ஆனால், பென்னம் பெரிய பதில்

**கேள்விகளைக் கேளுங்கள்,**
**பதில்களைப் பாருங்கள்!**

எழுதவேண்டும்! அப்படிப் பென்னம் பெரிய பதிலை எழுதினாலும் நீங்கள் அதனை முழுமையாக வாசிக்க மாட்டீர்கள்! ஆகவே, சுருக்கமாகச் சொல்கின்றேன். 'கடவுள் சிற்பத்தைக் கல் என ஒதுக்குகின்றவர்கள் பணத்தினைக் காகிதம் என ஒதுக்குவதில்லையே!' என்ற கூற்று இக்கேள்விக்கான பதிலை சிந்திக்கத் தூண்டவல்லது!

*(றமேஸ், யாழ்ப்பாணம்)*
**கே: சில உறவுகள், பிரச்சினையை உருவாக்குவதிலேயே கருத்தாய் இருக்கின்றார்கள்! என்ன செய்யலாம்?**
**ப:** றமேஸ், சிலரின் பொழுதுபோக்கு அது! என்ன செய்ய முடியும்!? அண்மையில் ஒரு வரிச் சிந்தனைத் துளியைப் படித்தேன்! உறவினர்களுக்கும் ஊசிக்கும் இரு ஒற்றுமை இருக்கின்றதாம்! 'குத்தி காட்டுறதும் கோர்த்து விடுறதும்!' என எழுதியிருந்தான் ஒருவன்.

(மேரி, வவுனியா)
**கே: இன்றைய காலத்தில் குறுக்கு வழியில் செல்பவர்கள்தான் அதிகமாகி வருகின்றார்கள்! வியாபாரம் செய்வதென்றால் என்ன? வேலை வாய்ப்பை பெறுவதென்றால் என்ன? வருவாயை ஈட்டுவதென்றால் என்ன? பதவி, பட்டங்களை அடைவதென்றால் என்ன? எல்லா இடங்களிலும் இதுவே இப்போதைய 'றெண்ட்' ஆக மாறி வருகின்றது! இதுபற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

**அருட்பணி செ. அன்புராசா**

**ப:** மேரி, எங்களோடு வாழ்ந்த ஒரு வயதான அருட்பணியாளர் அடிக்கடி ஒரு சிந்தனையை நினைவூட்டுவார்! 'We are very fast runners out side the track! Soon, we will be disqualified!' அதாவது, எங்களுக்குத் தரப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட சுவட்டுக்கு வெளியே வேகமாக ஓடுவதில் நாங்கள் வல்லவர்கள்! வெகு விரைவில் போட்டியிலிருந்து வெளியேற்றப்படுவோம்' என்பார். தவறான பாதையில் என்ன அதிவேகமாகப் பயணித்தும், எப்பயனும் இல்லை என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். சரியான பாதையில் மெதுவா-கச் சென்றாலும் இலக்கை எப்படியாவது எட்டிப் பிடித்துவிடலாம்!

# மறைபரப்புப் பணி திருமுழுக்குப் பெற்ற எம் அனைவரின் பணியாகும்

**ஆண்டு தோறும் திருஅவையில் ஒக்ரோபர் மாதம் 3 ஆம் ஞாயிறு மறைபரப்பு நாளாக அனுசரிக்கப்படுவது வழக்கம். அந்நாளில் சிறப்புத் திருப்பலி, மன்றாட்டங்கள், பண உதவி செய்தல் போன்ற நிகழ்வுகள் ஊடாக மறைபரப்புப் பணியில் இறைமக்கள் தம் பங்களிப்பை ஆர்வத்துடன் செய்வர்.**

**வரலாற்றில் நற்செய்தித் தூதுப்பணி**

கிறிஸ்துவிற்குப்பின் 16 - 17ஆம் நூற்றாண்டுகளில் "மிசன்" என்ற சொல் கிறிஸ்தவம் வேரூன்றாத இடங்களுக்குச் சென்று அதாவது கடல் கடந்து நாட்டெல்லை கடந்து, மொழி பண்பாடு கடந்து ஏன் அன்புறவுகளைக் கூடத் துறந்து சென்று மறைபோதகப் பணி ஆற்றுவதைக் குறித்தது. எனவே "மிசன்" என்ற சொல்லுக்கு அனுப்புதல் அனுப்பப்படுதல் திருத்தூதுக்குழு இறையருள் கட்டளைப் பணி மறை அறிவிப்புப்பணி, மற்றும் விசுவாசப்பரம்புதல் என்று பொருள் பெற்றது.

தொடக்கத்தில் ஸ்பெயின் போர்த்துக்கல் பிரான்ஸ் இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகள் நற்செய்தி அறிவிப்புப் பணியை மேற்கொண்டன. அதன் பின் 1622 முதல் 'நற்செய்தி அறிவிப்புத் திருப்பேராயம்' (Propaganda Fide) இப்பணியை ஏற்றுக்கொண்டு சிறப்பாகத் துறவற சபைகளின் வழியாகத் தொடர்ந்து ஆற்றி வருகிறது.

மறைபரப்பு அல்லது நற்செய்திப் பணியை ஆற்றுவது துறவற சபையினரின் பொறுப்பு மட்டுமல்லமாறாக திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமது அழைப்பின் இயல்பிலேயே அதனைக் கொண்டுள்ளனர். திருஅவை தனது நற்செய்தி அறிவிப்புப் பணியை எவ்வாறு நிறைவேற்றுகின்றது என்பதை சிந்திக்கும் இடத்து தனது சான்று பகரும் வாழ்வாலும் நற்செய்தியை பறைசாற்றுவதாலும் அருள் அடையாளங்களை வழங்குவதாலும் எல்ல மனிதர்களையும் கிறஸ்துவில் வழி நடத்தி அவர்களோடு உடனிருப்பதாலும் புரிகின்றனர்.

**ஆசிய மண்ணில் நற்செய்தி அறிவிப்புப் பணியில் மிளிர்ந்தோர்**

ஆசிய மண்ணில் நற்செய்தி அறிவிப்புப் பணியில் மிளிர்ந்த பல மறைபரப்பாளர்களின் வரிசையில் அப்போஸ்தலரான புனித தோமையார், புனித பிரான்சீஸ்கு சவேரியார் புனித யோசேவ்வாஸ், புனித அன்னை திரேசா போன்றோர் முன்னிலை வகிக்கின்றனா். இதுமட்டுல்லாமல் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் தம் உயிரைக் கொடுத்து மறைசாட்சியராய் சான்று பகர்ந்துள்ளனா். மறை சாட்சியராய் அங்கீகரிக்பட்டவர்கள் சிலர். ஆனால்




இன்னும் அங்கிகரிக்கப்படாதவர்கள் ஆயிரம் ஆயிரம் உள்ளனர். தம் உயிர் கொடுத்தவர்கள் சிலர். தம் உடவிலும் உள்ளத்திலும் பிரமாணிக்கம் உள்ள கிறிஸ்தவர்களாக இறப்புவரை நிலைத்து நின்றவர்கள் ஆயிரம்.

புனிதர்கள் அல்லது தூயவர்கள் என்று நாம் போற்றும் மறைபரப்பாளர்கள் யார்? அன்புள்ளம் கொண்ட இறைவனின் அழைப்பை ஏற்று ஆண்டவர் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி தம் வாழ்நாள் பூராக இறையன்புக்குப் பிரமாணிக்கமாக இருப்பவர்களே. வாழ்வின் சோதனைகளை சவால்களாக ஏற்று அவற்றிற்கு முகம் கொடுத்து இறை இருத்தலோடு இணைந்து பயணித்து இறையன்புக்குப் பிரமாணிக்கமாக இருப்பவர்களே.

**தொகுப்பு:**
**அருட்பணி**
**எஸ்.எயின்சிலி றொஷான்**

# தேசிய பொது நிலையினர்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

**திருஅவையோடு இணைந்து பயணிப்போம்.**

எமது இலங்கைத் திருஅவை அன்பிய யூபிலி ஆண்டில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. தவிர்க்கமுடியாத இக்கொரோனாநடைமுறைகள்திட்டமிடப்பட்ட அன்பிய யூபிலி ஆண்டு செயற்பாடுகளில் ஒரு பெரும் தாக்கத்தையும் பின்னடைவையும் ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும் இறை ஞானத்தோடு இந்நிலையை நோக்கினால் நாம் ஒவ்வொரு வரும் அன்பியமாக வாழ இறைவன் எமக்குத் தரும் மிக உன்னதமான காலமும் அழைப்பும் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும். எனவே குடும்பத்திலும் எமது உறவுகளுக்குள்ளும் நாம் வாழும் சூழலிலும் அன்பிய வாழ்வைக் கட்டி எழுப்புவோம். அத்துடன் எமது இலங்கைத் திருஅவையின் கொரோனா நோய் நீங்க வேண்டும் என்ற பொதுக்கருத்துக்கான இணையவழித் திருச்செபமாலை யாத்திரையி லும் குடும்ப செபமாலையிலும், உணர்வு பூர்வமாகவும் பக்தியோடும் பங்கெடுப்போம். இதன் மூலம் ஒவ்வொருநாளும் திருஅவையோடு இணைந்து பயணிப்போம்.

**முடிவாக**

பொதுநிலையினராகிய எமது எழுச்சியிலேதான் திருஅவையின் வளர்ச்சி உண்டு என்பதை ஏற்றுக் கொண்டு எமது அழைத்தலிலே உண்மையோடும் பிரமாணிக்கத்தோடும் பணிகள் செய்து இறையரசைக் கட்டி எழுப்புவோம். இறைவன் எமக்குத் தந்த இக் காலத்துக்கான இனிய வாழ்வைச் சரியான முறையில் பயன்படுத்தி வாழ்வாக்கி எமது நாட்டில் இறையாட்சி மலர்ந்து மணவீசவும் நிலையான சமாதானம் எற்படவும் உழைப்போம்.

**ஜ.அ.அமலரட்ணம்**
**யாழ்மறைமாவட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் கழகம்.**

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் வண்ணில்

28 – 07 – 1949



10 – 10 – 2011

அமரர்

### S. மரியரட்ணம்

"உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன்
நீ எனக்கு உரியவன் (எசா 13:1)

உன் அன்பை தோற்கடிக்கும் மற்றொரு
அன்பை உலகில் யாரும் தரப்போவதில்லை
உன்னைத் தவிர.....

நீர் எம்மை இவ்வுலகில் தவிக்க விட்டு இறைவனின்
வான் வீட்டில் இன்புற்றிருக்கச் சென்று இன்றோடு
ஆண்டுகள் பத்து ஆனதோ அப்பா..........

*உம் பிரிவால் வாடும்*
*மகன்மார், மருமகள்மார்*
*பேரப்பிள்ளைகள்*
*உற்றார் உறவினர்கள்*

AD 73

## 52 ஆவது ஆண்டு திருமண நாள் நினைவு



அமரர்

### திருமதி மரியா மின்னொளி ஜீலியன்

(லூர்த்து மலர்)

(19.10.2021)

கிறிஸ்துவோடு என்றும் இருக்கிறாய் என்பதை முழுமையாக நம்புகின்றோம். நியாயமான எம் தேவை நிறைவேற இயேசுவிடம் எமக்காய் மன்றாடும்.

என்றென்றும்
உம் நினைவுகளுடன் அன்பான
கணவர் ஜீலியன்

8/9, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

AD 74

## திருத்தந்தை முதலாம் யோவான் பவுல், அருளாளராக அறிவிப்பு

1978ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி கத்தோலிக்கத் திருஅவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 33 நாட்களுக்குப் பின், செப்டெம்பர் 28ம் திகதி இறையடி சேர்ந்த திருத்தந்தை முதலாம் யோவான் பவுல் அவர்களை, அருளாளராக உயர்த்தும் வழிமுறைகளுக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இசைவளித்துள்ளார்.

கத்தோலிக்கத் திருஅவையில், புனிதர்கள் மற்றும் அருளாளர்களை அறிவிக்கும் வழிமுறைகளை ஒருங்கிணைக்கும் பேராயத்தின் தலைவரான கர்தினால் மார்செல்லோ செமராரோ அவர்களை தன் மறைக்கல்வி உரையை வழங்கச் செல்வதற்கு முன் சந்தித்த திருத்தந்தை, வணக்கத்திற்குரிய இறையடியாரான திருத்தந்தை முதலாம் யோவான் பவுல் உட்பட, எட்டுப் பேரின் புண்ணிய வாழ்வு குறித்த விவரங்களை, ஏற்றுக்கொண்டார்.

1912ம் ஆண்டு ஒக்டோபர் 17ம் திகதி இத்தாலியின் Forno di Canale (தற்போது, Canale d'Agordo என்றழைக்கப்படும்) என்ற ஊரில் பிறந்து, 1978ம் ஆண்டு செப்டம்பர் 28ம் திகதி திருத்தந்தை முதலாம் யோவான் பவுல் என்ற பெயருடன் இறையடிசேர்ந்த அல்பீனோ லூச்சியானி (Albino Luciani) அவர்களின் பரிந்துரையால் நிகழ்ந்த ஒரு புதுமையைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, தற்போது, வணக்கத்துக்குரிய இறையடியாராகப் போற்றப்படும் திருத்தந்தை முதலாம் யோவான் பவுல் அவர்கள், அருளாளராக அறிவிக்கப்படுவதற்கு இசைவளித்தார். அத்துடன், வணக்கத்துக்குரிய இறையடியாரான Maria Berenice Duque Hencker அவர்களின் பரிந்துரையால் நிகழ்ந்துள்ள புதுமையை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, அவரும் அருளாளராக அறிவிக்கப்படுவதற்கு இசைவளித்தார்.

## ஆண்டவர் அழைப்பின் 1ம் ஆண்டு நினைவு கூரல்

மலர்வு
30 . 04 . 1946



உதிர்வு
17 . 10 . 2020

அனைவரையும் ஆதரிப்பாய்
பக்குவம் பல சொல்லிடுவாய்
இப்போது அவை கேட்க
நீ இங்கு இல்லையம்மா

மனத்தோடு போராடும்
மறையாத ஞாபகங்கள்
நீர் விழியோடு உம் நினைவு
என்றென்றும் - மாறாது மறையாது!

அமரர்

### யோசப்பின் தேவநாயகம் (தவம்)

"நீர் தேர்ந்தெடுத்து உம்மருகில் வைத்துக்கொள்ளும் மனிதர் பேறுபெற்றோர்." (தி.பா 65:4)

ஓராண்டு ஓடியதோ! ஆனாலும்
ஓயாது எம்துயரம் தாளாது எங்கள் மனம்
நெஞ்சூட்டி வளர்த்தவளே! அம்மா
தவமாக வந்தவளே!

எத்தனை பிறவியோ இனி
உன்முகத்தைப் பார்ப்பதற்கு - அம்மா
எங்கு உன்னைத் தேடுவதோ - நாம்
பட்ட கடனைத் தீர்ப்பதற்கு!

நித்திய வாழ்வினில் பயணிக்கும் எம் அன்புத் தாயே! உங்கள் ஆன்மா இறைவனில் அமைதிபெறத் தினமும் எமது செபத்தில் வேண்டுகின்றோம்.

ஆன்ம இளைப்பாற்றி திருப்பலி 16.10.2021 சனிக்கிழமை உருத்திரபுரம் புனித பற்றிமா ஆலயத்தில் நடைபெற்றது. 22.10.2021 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் ஆன்ம இளைப்பாற்றி திருப்பலி நடைபெறும்

கணவர், பிள்ளைகள்,
சகோதரிகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

இல 4A, அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம்

AD 70

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்கள் மல்வம் திருக்குடும்ப ஆலயத்தை ஸ்தாபிக்க ஆரம்பித்த போது சுவாமி அவர்களுக்கு உறுதுணையாக நின்றவரும், சுவாமியால் ஆலய மூப்பராக நியமிக்கப்பட்டவருமான ஜேக்கப் அருளப்பு அவர்கள் மண்ணை விட்டுப் பிரிந்த

## 50 வது வருட நினைவஞ்சலி

பிறப்பு
03 . 10 . 1892



இறப்பு
03 . 10 . 1971

### அமரர் ஜேக்கப் அருளப்பு

உயிர்ப்பும் உயிரும் நானே: என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் (யோவான் 11:25)

மல்வத்து மைந்தனின்
மகத்தான சேவையை
மனதார நினைவு கூரும்
இவ்வேளை தனில் இவ்வுலகை
விட்டு நீங்கள் மறைந்து
போனாலும் மறந்து போகாது
உங்கள் இனிய நினைவுகள்

இரக்கத்தின் தேவனே! தன் விசுவாச வாழ்வைக் காத்து இறந்தும், இறவாமல் எம் மனங்களில் வாழும் எம் அன்புத் தந்தையின் ஆன்மா இறைவனில் இளைப்பாறிட மன்றாடுகின்றோம்.

*பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்*
*பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.*

AD 67

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவஞ்சலி

மண்ணக வாழ்வில்
06 . 11 . 1945



விண்ணக வழியில்
13 . 09 . 2021

அமரர்

### சின்னப்புநாயகம் லோறன்ஸ் சவுந்தரநாயகம்

[ஓய்வு பெற்ற கணித ஆசிரியர்]

"ஆண்டவரே, உம் ஊழியனுக்கு நீர் கொடுத்த வாக்குறுதியை நினைவு கூர்ந்தருளும்... அவர் உமது தரிசனத்தில் வாழ்வார்.... அதனால் எமக்கு நம்பிக்கை அளித்தீர் ; இந்த நம்பிக்கை அவர் பிரிவில் எமக்கு ஆறுதல் அளிக்கின்றது." சங் 118:49-50

118,4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

AD 68

# யாழ். போதனா வைத்தியசாலை வருடாந்தத் திருவிழா



யாழ். போதனா மருத்துவமனையின் வருடாந்தத் திருவிழா 26.09.2021 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. இத் திருவிழாத் திருப்பலியை அ.ம.திகளின் யாழ். மாகாண முதல்வர் அருட்பணி இயூஜின் பெனடிக்ற் அ.ம.தி அடிகள் நிறைவேற்றினார். கொரோனா அச்சுறுத்தல் மத்தியிலும் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து மட்டுப்படுத்தப்பட்ட மருத்துவமனைப் பணியாளர்களுடன் திருவிழாத் திருப்பலி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ். போதனா மருத்துவமனை சிற்றாலயத்தினுடைய புனருந்தாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட இருப்பதனால் இறைமக்கள் தம் தாராளமான பங்களிப்புக்களை வழங்கி உதவுமாறு மருத்துவமனை ஆன்மீக இயக்குநர் அருட்பணி அருள் சுதர்சன் அ.ம.தி அடிகளார் கேட்டு நிற்கின்றார்.



கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக் களத்தினால் மறைப்பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட தளபாடங்கள் ஒருசில பங்குகளுக்கு யாழ். ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் கையளிக் கப்பட்டது.

# சர்வதேச சமாதான தினம்
## அமலமரித்தியாகிகளினால் அனுஸ்டிப்பு




ஒரு சிறந்த சமத்துவமான, நிலையான உலகத்தை நோக்கி, என்ற தொனிப்பொருளில் இந்த வருடம் ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதேச சமாதான தினம் செப்டெம்பர் 21ஆம் திகதி அமலமரித் தியாகிகள் சபையின் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தினால் யாழ்ப்பாணத்தில் சாட்டிக் கிராமத்திலும், கிளிநொச்சியில் சாந்தபுரம் கிராமத்திலும் அனுஷ்டிக்கப்பட்டது. மனிதம் மறைந்து கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் உண்மையான அமைதியை அனுபவிக்க மக்களை ஊக்குவிக்கும் முகமாக சமாதான தினம் அமைந்திருந்தது. இந்நிகழ்வில் அதிகளவு மக்கள் பங்கேற்க முடியாத சூழ்நிலை இருந்தமையால் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக் கையில் தந்தையர்கள் அன்னையர்கள் இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உயிருக்கு உதிரம் கொடுத்த குளமங்கால் இளையோர்



குளமங்கால் புனித சதாசகாய அன்னை இளையோர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் உயிருக்கு உதிரம் என்று அழைப்போடு கொவிட் - 19 பேரிடர் கால இரத்ததான முகாம் குளமங்கால் புனித சவேரியார் ஆலய வளாகத்தில் 26.09.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது. தெல்லிப்பளை வைத்தியசாலை இரத்தவங்கிக் குழுவினரின் உதவியுடன் நடைபெற்ற இவ் இரத்ததான முகாமில் 57க்கும் அதிகமான இளையோர் இணைந்து குருதிக் கொடையை வழங்கியிருந்தார்கள்.

குளமங்கால் பங்குத்தந்தை அருட்திரு J.C. பாஸ்கரன் அடிகளின் வழிகாட்டலில் இந்நிகழ்வு மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

# விசேட தேவையுடையோரின் மேம்பாட்டிற்கு
## வன்னி கியூடெக் நிறுவனம் உதவி



கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவனத்தினால் கிளிநொச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளிலும், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுகளிலுமுள்ள விசேட தேவையுடையோரின் மேம்பாட்டிற்கென சமூகம் சார் நிகழ்ச்சித் திட்டத்தினை கடந்த வருடம் யூன் மாதம் முதல் முன்னெடுத்து வருகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாகத் தெரிவுசெய்யப்பட்ட 162 விசேட தேவையுடைய பிள்ளைகளின் குடும்பங்களுக்கு இந்நிறுவனம், அனைத்துலக மருத்துவநல அமைப்பின் அனுசரணையுடன் ரூபா இரண்டாயிரம் பெறுமதியான உணவுப் பொதிகளைக் கடந்த 29ஆம் திகதி வழங்கிவைத்துள்ளது.

# ஊர்காவற்துறைப் பங்கில் உதயமானது
## புனித வின்சென் டி போல் சபை



ஊர்காவற்துறைப் பங்கிற்கான புனித வின்சென்ற் டி போல் சபை அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த இரு வாரங்களுக்கு முன் பங்குத்தந்தை அருட்பணி S.J.Q. ஜெயரஞ்சன் அடிகள் தலைமையில் நடைபெற்றது. புதிதாக உதயமான இச்சபைக்கு **"புனித அன்னை திரேசா பந்தி"** எனப் பெயர் சூட்டப்பட்டது.

இந் நிகழ்வில் யாழ் மறை மாவட்ட புனித வின்சென்ற் டி போல் சபையின் ஆன்ம ஆலோசகர் அருட்பணி எஸ். நேசநாயகம் அடிகள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கருத்துரை வழங்கினார்.

இந் நிகழ்வில் மத்திய சபைச் செயலாளர் திரு. எஸ். நியூட்டன் அவர்களும் மத்திய சபையின் உப தலைவி செல்வி மரியநாயகி அவர்களும் சபை அங்கத்தவர்களை ஊக்குவித்துக் கருத்துரைகளை வழங்கினர். ஈற்றில் பங்குத்தந்தையின் நன்றியுரையுடன் ஆரம்ப நாள் நிகழ்வுகள் முடிவடைந்தன.

# புனித வின்சென்ற் டி போல் திருவிழாவில்
## வின்சென்தியர்களின் பிரார்த்தனை



புனித வின்சென்ற் டி போல் திருவிழா கடந்த 27.09.2021 அன்று கொண்டாடப்பட்டது. இவ்விழாவை முன்னிட்டு புனித வின்சென்ற் டி போல் தேசிய சபை ஆன்ம இயக்குநரின் வழிகாட்டுதலுக்கு அமைவாக அன்றைய தினம் மாலை 7.00 மணியிலிருந்து 7.30 மணிவரை இலங்கையிலுள்ள அனைத்து வின்சென்தியர்களும் ஒன்றாக இணைந்து ஆன்மீகப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

கொடிய தொற்று நோயிலிருந்து மக்கள் அனைவரும் விடுபடவும், அருளாளர் பிரெற்றிக் ஓசானம் அவர்கள் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவும், ஆயுதத் தாக்குதலால் பாதிக்கப் பட்டோருக்கு நீதி கிடைக்கவும் வின்சென்தியர்களின் பணிகள் சிறப்புற அமைய வேண்டியும் இவ் ஆன்மீகப் பிரார்த்தனை நடைபெற்றது.

# அருட்பணியாளர்களுக்கான வருடாந்தத் தியானம்

யாழ் மறை மாவட்டத்தில் பணிபுரியும் அருட்பணியாளர்களுக்கான வருடாந்தத் தியானம் எதிர்வரும் கார்த்திகை மாதம் இரு பிரிவுகளாக பண்டத்தரிப்பு புனித பற்றிமா தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது. முதற் பிரிவினருக்கான தியானம் கார்த்திகை 8ம் திகதி முதல் 12ம் திகதி வரையும் இரண்டாம் பிரிவினருக்கான தியானம் 22ம் திகதி முதல் 26ம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

சுகாதார நடைமுறைகளுக்கமைவாக இத்தியானம் இடம்பெறவுள்ளது. குருக்களின் தியான நாட்களில் இறை மக்களாகிய நாம் எம் குருக்களுக்காக மன்றாடுவோமாக.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.